# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 396

சனி, 20 ஜூன், 2026 |

பக்கங்கள் 18

www.ilakku.org













# செம்மணி அகழ்வில் குவியலாக காணப்பட்ட என்புகூடுகள் அடையாளம்!



செம்மணி மனித புதைகுழியில் இருந்து மேலும் 03 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில், புதிதாக 07 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 29ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அடையாளம் காணப்பட்ட என்பு கூடுகளில் 08 என்புக்கூடுகள் ஒன்றாக குவியலாகக் காணப்பட்டுள்ளது.

அதவேளை உலோக துண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அதற்குள் என்புக்கூடுகள் காணப்படுவதனால், அதனை பக்குவமாக சுத்தப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதனடிப்படையில் இது வரையிலான அகழ்வு பணிகளின் போது, 394 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 370என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நீதி அமைச்சர் உள்ளிட்ட விசேட குழுவினர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தின் ஆணையாளர்கள் உள்ளிட்ட குழுவினரும் புதைகுழி அகழ்வு பணிகளை பார்வையிட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.


## பயங்கரவாத தடைச்சட்டம் இந்த ஆண்டுக்குள் முழுமையாக இரத்து செய்யப்படும் - பிரதமர் உறுதி

பயங்கரவாத தடைச்சட்டம் இந்த ஆண்டுக்குள் முழுமையாக இரத்துச் செய்யப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். சமகால அரசியல் நிலைவரம் தொடர் பில் தனியார் தொலைக்காட்சியுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின்போது மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

மேலும் புதிய அரசியலமைப்பு மக்களின் அங்கீகாரத்துடன் எமது ஆட்சிக்குள் உருவாக்கப்படும். தற்போதைய நிலையில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஏழ்மை ஒழிப்புக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள அரசியலமைப்பு பல திருத்தங்களை உள்ளடக்கி முரண்பாடுகளை கொண்டதாகவே காணப்படுகிறது. புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதாக தேர்தல் கொள்கை பிரகடனத்தில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்தோம் என்பதை நாங்கள் மறக்கவில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது பாரியதொரு பொறுப்பாகும். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அதற்கு விசேட முன்னுரிமை வழங்க முடியாத நிலைமை காணப்படுகிறது. யாப்புருவாக்கத்தில் அனைத்து இன மக்களும் பங்காளிகளாக வேண்டும்' என்றார்.

தொடர்ச்சி: பக்கம் 14

## திருகோணமலை நிலத்தடி சிறை: விசாரணையை தீவிரப்படுத்த உத்தரவு



திருகோணமலை கடற்படை முகாமில் உள்ள 'Gun Site' எனப்படும் நிலத்தடி சிறைச்சாலை தொடர்பான விசாரணைகளை தீவிரப்படுத்துமாறு, திருகோணமலை நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் உத்தரவிட்டுள்ளார். குறித்த நிலத்தடி சிறைச்சாலையில், கடத்தப்பட்ட பலர் சித்திரவதை செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

அதனடிப்படையில், நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீன், நிலத்தடி சிறைச்சாலைக்குச் சென்று கள ஆய்வை மேற்கொண்டிருந்தார். பதினொரு இளைஞர்களைக் கடத்தி

தொடர்ச்சி: பக்கம் 03

# புரிந்துணர்வு ஒப்பந்தம் பலத்தின் மூலம் பெற்ற வெற்றி - தெஹ்ரான்





அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே புதிதாக கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், தெஹ்ரான் தனது பலத்தின் மூலம் பெற்ற ஒரு ராஜதந்திர வெற்றி என்றும், வொஷிங்டன் தனது எந்தவொரு இராணுவ நோக்கங்களையும் அடையத் தவறிவிட்டது என்பதற்கான சான்று என்றும் ஈரானிய அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை(18) கூறியுள்ளனர்.

பாகிஸ்தானிய மத்தியஸ்தர்களின் கூற்றுப்படி, 14 அம்சங்களைக் கொண்ட இந்த ஆவணம், புதன்கிழமை இரவு அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது ஈரானிய சகா மசூத் பெஷெஷ்கியன் ஆகியோரால் தொலைவிலிருந்து கையெழுத்திடப்பட்டு உடனடியாக அமலுக்கு வந்தது.

அமெரிக்கத் தரப்பு தனது பகிரங்கமான பதிலில் வழக்கத்திற்கு மாறாக மௌனம் காத்து வருகிறது. இந்த ஒப்பந்தத்தைச் சுற்றியுள்ள இரகசியத்தன்மை குறித்த பல நாள் விமர்சனங்களுக்குப் பிறகு, பெயர் குறிப்பிடப்படாத ஒரு மூத்த அமெரிக்க அதிகாரி 14 அம்சங்கள் கொண்ட இந்த ஆவணத்தை பத்திரிகையாளர்களுக்கு வாசித்துக் காட்டியபோதிலும், வெள்ளை மாளிகை இன்னும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இறுதி உரையை வெளியிடவில்லை.

இதற்கிடையில், ஈரானின் நாடாளுமன்ற சபாநாயகரும் பேச்சுவார்த்தைகளின் தலைமைப் பேச்சுவார்த்தையாளருமான முகமது காலிபாஃப், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமெரிக்கா

தொடர்ச்சி: பக்கம் 16

## இஸ்ரேலின் பங்கு வொஷிங்டனால் தீர்மானிக்கப்படும் - சாத்தம் ஹவுஸ்



ஈரானுடன் வரவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேலின் பங்கு வொஷிங்டனால் தீர்மானிக்கப்படும் என்று சாத்தம் ஹவுஸின் (பிரித்தானியாவைச் சேந்த சிந்தனைப் பள்ளி) மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கா திட்டத்தின் மூத்த ஆலோசகரான யோசி மெக்கெல்பர்க் கடந்த வியாழக்கிழமை(18) தெரிவித்ததுள்ளார்.

நெதன்யாகுவை "ஒரு அற்புதமான பிரதமர்" என்று வர்ணித்த மற்றும் லெபனான் மீதான அவர்களின் கருத்து வேறுபாடுகளைக் குறைத்து மதிப்பிட்ட ட்ரம்பின் முந்தைய கருத்துக்களைக் குறிப்பிட்ட மெக்கெல்பர்க், "போரை எவ்வாறு தொடர்வது என்பது குறித்து அவர்களுக்குள் உண்மையான கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும்", ட்ரம்ப் "நெதன்யாகுவிடம் சற்று மென்மையாக நடந்து கொண்டார்". வரவிருக்கும் தேர்தல் காலத்திற்கு முன்னதாக, இஸ்ரேல் என்ன சாதித்துள்ளது என்பது குறித்து இப்போது அங்கு ஒரு விவாதம் தொடங்கும்.

"கடந்த இரண்டரை ஆண்டுகளையும், பல முனைகளில் கிட்டத்தட்ட அதிகபட்ச சக்தியைப் பயன்படுத்தியும் ஒரு தீர்க்கமான முடிவு இல்லாமல் இஸ்ரேல் உண்மையில்

தொடர்ச்சி: பக்கம் 16

## பிரேசிலின் தேர்தல்களில் அமெரிக்கா தலையிடக் கூடாது - லூலா



பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள தனது நாட்டின் அதிபர் தேர்தலில் அமெரிக்கா தலையிடக் கூடாது என்று எச்சரித்துள்ளார்.

புதன்கிழமை(17) அன்று லூலாவும் அவரது அமெரிக்க சகா டொனால்ட் ட்ரம்பும் பிரான்சின் எவியான்-லெஸ்-பெய்ன்ஸ் நகரில் நடைபெற்ற G7 மாநாட்டில் கலந்துகொண்டதைத் தொடர்ந்து இந்தக் கருத்துக்கள் வெளியாகின.

செய்தியாளர் சந்திப்பின் போது, 2019 முதல் 2023 வரை பிரேசிலின் அதிபராக இருந்த ஜெய்ர் போல்சனாரோவைக் கொண்ட போல்சனாரோ குடும்பத்துடனான தனது உறவைத் தொடர ட்ரம்புக்கு உரிமை உண்டு என்று லூலா கூறினார்.

தொடர்ச்சி: பக்கம் 14

## ஈக்வடோரியல் கினியாவின் முழு அரசாங்கமும் ராஜினாமா



முக்கிய இலக்குகளை அடையத் தவறியதால், ஈக்வடோரியல் கினியாவின் முழு அரசாங்கமும் ராஜினாமா செய்துள்ளது என்று அந்த மேற்கு ஆப்பிரிக்க நாட்டின் துணை ஜனாதிபதி தியோடோரோ நுகேமா ஒபியாங் மாங்கு செவ்வாயன்று(16) அறிவித்தார்.

அமைச்சர்கள் சபையின் ஒரு சிறப்பு அமர்வின் போது, பிரதமர் மானுவல் ஓசா என்சு என்சுவா நிர்வாகத்தின் ஒட்டுமொத்த ராஜினாமாவைச் சமர்ப்பித்தார் என்று துணை ஜனாதிபதி அறிக்கையில் தெரிவித்தார்.

முன்னாள் தேசிய வங்கித் தலைவரான ஓசா, பொருளாதாரம், சமூக நல்லிணக்கம் மற்றும் ஊழல் ஆகியவற்றைக் கையாண்ட விதம் குறித்து ஜனாதிபதி தியோடோரோ ஒபியாங் நுகேமா மபாசோகோ விமர்சித்ததைத் தொடர்ந்து முந்தைய அரசாங்கம் பதவி விலகிய பிறகு, ஒகஸ்ட் 2024-ல் நியமிக்கப்பட்டார்.

தொடர்ச்சி: பக்கம் 14

## வட்டுவாகல் விகாரைக்கு கீழ் செம்மணியை விடவும் பெரிய புதைகுழி உள்ளதாக ரவிகரன் எம்.பி தெரிவிப்பு

முல்லைத்தீவு - வட்டுவாகல் விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், செம்மணியை விடவும் பல மடங்கு பெரியதொரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்படும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் துரை ராசா ரவிகரன் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.



“செம்மணி மனிதப் புதைகுழி இலங்கையின் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தின் சாட்சியாக உருவெடுத்திருக்கும் நிலை யில், இதற்குச் சர்வதேச நாடுகளும் இலங்கை அரசும் என்ன பதிலைக் கூறப்போகின்றன” என்று துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள் ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய புதைகுழிகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். “எங்க ளுடைய தமிழ் இனத்தின் மீதான திட்டமிட்ட அழிவுகளை இலங்கை அரசினுடைய ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாகச் செய்துகொண்டே வந்திருக்கின்றார்கள்.

ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள் எமது இனத்தை வன்முறையாக அழித்தமைக்கான அசைக்க முடியாத சாட்சிகள், இயற்கையின் நீதியால் தற்போது ஒவ்வொன்றாக வெளியே வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன” என்று அவர் கூறினார்.

செம்மணியில் தற்போதைய அகழ்வுகளின் மூலம் வெளி வரும் உண்மைகள் உலகத்தையே உலுக்கியுள்ளன. தமிழர் தாயகப் பகுதிகளில் இன்னும் எத்தனையோ இடங்களில் இவ்வாறான மனிதப் புதைகுழிகள் இரகசியமாக மூடிமறைக்கப்பட்டுள்ளன.

அவற்றை முறையாகத் தோண்டத் தொடங்கினால், இன்னும் பேரதிர்ச்சியைத் தரும் வகையிலான மனித என்புக் குவியல்கள் தொடர்ச்சியாகக் கிடைத்துக்கொண்டே இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

“குறிப்பாக, முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந் துள்ள விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், செம் மணியை விட மிகப்பெரியதொரு மனிதப் புதைகுழி வெளிச்சத்துக்கு வரும். இதற்காக அந்த விகாரையை உடைத்துத்தான் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதில்லை.

தற்கால நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி, ‘ஸ்கேன்’ செய்வதன் மூலமே அங்கு நிலத்தடியில் எத்தனை ஆயிரக்கணக்கான என்புத் தொகுதிகள் புதைக்கப்பட்டுள்ளன என் பதைத் துல்லியமாக ஆராய்ந்து அறிய முடியும்” என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இதேபோல், கேப்பாப்பிலவு போன்ற இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மற்றும் இருக்கின்ற பல இடங்களில் பாரிய மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என அப்பகுதி மக்கள் இன்றும் பலத்த அச்சத்துடன் இருக்கின்றார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான இடங்களில் அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, கூட்டங்கூட்டமாகப் புதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சந்தேகத்துக்குரிய அந்த மனிதப் புதைகுழிகள் அனைத் தும் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் முழுமையாகத் தோண்டப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.

### திருகோணமலை நிலத்தடி ... தொடர்ச்சி...

காணாமலாக்க செய்ததுடன், மேலும் பலரைச் சித்திரவதை செய்வதற்கு இந்த ‘கன்சைட்’ சிறை பயன்படுத்தப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே இந்த கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, இந்த சம்பவம் தொடர்பான விசார ணைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நீதவான் உத்தர விட்டுள்ளார். அத்துடன், விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை மூன்று நாட்களுக்குள் நீதிமன்றத் தில் சமர்ப்பிக்குமாறும் அவர் பணித்துள்ளார். அதேநேரம், குறித்த அறிக்கையுடன் சம்பவம் தொடர்பான காணொ ளிப் பதிவுகளையும், நிழற்படங்களையும் சமர்ப்பிக்கு மாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். நீதவானின் கள ஆய்வைத் தொடர்ந்து, பெறப்பட்ட தகவல்களின் அடிப் படையில் மேலதிக விசாரணைகள் நேற்று (19) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## ஆசிரியர் தலையங்கம் | 20 ஜூன், 2026

## ஆரம்பமாகியுள்ள ட்ரம்பின் 60நாள் ஆட்டக்காலத்தில் ஈழத்தமிழர் இறைமையை ஈழத்தமிழரே பாதுகாக்க வேண்டும்

அமெரிக்க ஈரான் 60நாள் இடைக்கால அமைதி உடன்படிக்கை பிரான்சில் 52 வது ஜி7 நாடுகளின் உச்சி மாநாட்டுக்கு வருகைபுரிந்திருந்த அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்பினால் 1919 இல் யேர்மனியுடன் நேசப்படைகள் மேற்கொண்ட அமைதி உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்ட வரலாற்றுத் தன்மையுடைய வேர்சாய் அரண்மனையில் பிரான்சின் அரசத்தலைவர் மக்ரோன் அருகிருக்க ஈரானியத்தலைவர்களுடன் 17.06. 2026இல் கையெழுத்து இடப்பட்டது. 19.06. 2026 முதல் இந்த இடைக்கால உடன்படிக்கை உத்தியோக பூர்வமாக நடைமுறைக்கு வந்து 20.06.2026 இல் இந்த உடன்படிக்கை லெபனானையும் உள்ளடக்குகிறது என அமெரிக்க அளித்த விளக்கத்தை அடுத்து இஸ்ரேலுக்கும் கிஸ்புல்லாக்களுக்கும் இடையிலான போர்நிறுத்தமும் நடைமுறைக்கு வந்துள்ளது. 1919 ம் ஆண்டின் வேர்சாய் உடன்படிக்கை 2ம் உலகப்போராக பரிணாமடைந்தது போல இந்த இடைக்கால உடன்படிக்கையும் தொடங்கி விட்ட மறைமுகநிலை 3ம் உலகப்போரை வெளிப்படையான போராக மாற்றிவிடுமா என்கிற அச்சம் அனைத்துலக போரியல் ஆய்வாளர்களால் எழுப்பப்பட்டதை உறுதியாக்குவது போல அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் ஈரானிய உச்சத்தலைவர் மொஜ்தபா அல் கமெனி அவர்கள் கூற்றுக்கு தனது ‘ட்ருத்’ பதிவில் அளித்துள்ள பதில் அமைகிறது.

“ஏமாற்றத்தின் காரணமாகவே அமெரிக்கா ஈரானுடன் அமைதிப்பாதையில் நுழைந்தது” என்ற ஈரானிய உச்சத்தலைவர் மொஜ்தபா அல் கமெனி அவர்கள் கூற்றுக்கு தனது “ட்ருத்” கணக்கில் “ அவர்கள் முடித்துவிட்டார்கள். இந்த 60நாள் ஆட்டத்தை நாம் விளையாடுவோம்” என அமெரிக்க அரசத்தலைவர் ட்ரம்ப் அவர்கள் பதிவிட்டுள்ளமை அமெரிக்கா இந்த காலக்கட்டத்தை ஈரானின் இறைமையை மதிப்பதாக உடன்படிக்கையில் எழுதிவிட்டு அதற்கு எதிர்மாறாக ஆயுதபலத்தினால் அமெரிக்க முடிவுகளைத் திணிக்கும் முறையில் செயற்படப்போகிறது என்பதைக் கூறாமல் கூறியுள்ளது. ட்ரம்ப் அவர்கள் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகத்தை அமெரிக்க யுத்த அமைச்சகமாகப் பெயர் மாற்றம் செய்திருப்பது அமெரிக்க காங்கிரசின் செனட்டின் வழமையான அமெரிக்க அரச அதிபர் தான் நினைத்ததைச் செய்வதைத் தடுக்கும் அரசியலமைப்புப் பாதுகாப்புக்களில் இருந்து விடுபட்டு நாடு யுத்த சூழலில் உள்ளதென அரசஅதிபரின் கட்டுப்பாட்டுக்குள் அனைத்தையும் செயற்படுத்தும் முயற்சியாகவும் அமைவதால் அமெரிக்க தொடர்ந்து போர்களை; சந்திப்பதற்கான முன்ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகிறது என்பதைத் தெளிவாக்குகிறது.

மேலும் ட்ரம்ப் அவர்கள் தனது முதலாவது ஆட்சிக்காலத்தில 2018 இல் 1948 இல் அக்கால அமெரிக்க அரசத்தலைவர் ட்ரூமன் அவர்கள் உருவாக்கிய பசுபிக் கடல் பிராந்திய கட்டளைப் பணியகத்தை இந்தியாவையும் உள்ளடக்கி பசுபிக் இந்தோ கடல் பிராந்தியக் கட்டளைப் பணியகமாக மறுபெயரீடு செய்தார். எட்டு ஆண்டுகளில் இன்று மீளவும் இந்தியாவை விலக்கும் நோக்கில் மீளவும் பசுபிக் கடல் பிராந்தியக் கட்டளைப் பணியகமாக பெயர் மாற்றம் செய்துள்ளார். இந்தியாவுக்கும் ரஸ்யாவுக்கும் இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் உள்ள நெருக்கமான உறவுகள் குறித்த சந்தேகமும் அச்சமுமே இவ்வாறான போக்குகளுக்குக் காரணமாகின்றது. மாநாட்டில் பங்கேற்ற இத்தாலியப் பிரதமர் மெலானி தன்னுடன் நிழற்படமெடுக்க தன்னிடம் மற்றாடியதாக ட்ரம்ப் கூறியதை அவர் மறுத்ததும் அல்லாமல் அமெரிக்காவுக்கான இத்தாலிய வெளிவிவகார அமைச்சின் பயணத்தையும் இத்தாலி ரத்து செய்துள்ளது. இந்தியப் பிரதமருக்கும் “ மோடி அமைதியானவர் - இனிமையானவர் - கூட்டு மொத்தமாகக் கொல்பவர்” எனவும் “ இனி மோடியுடன் நெருங்க மாட்டேன்” எனவும் கூறிவிட்டு “ஆனால் இந்தியாவை யாரும் தாக்கினால் அமெரிக்கா உடனுதவும் “ என உத்தரவாதமும் கொடுத்தார். இரண்டு நாட்களுக்குள் “ மோடி யுத்தங்களில் ஈடுபடாததினால் தலைசிறந்த தலைவர். அமெரிக்க இந்திய வர்த்தகம் தொடரும்” இவைகள் எல்லாம் உலக அரசியல் தலைமைகளின் பதற்ற அரசியலின் வெளிப்பாடாக உள்ள நிலையில் சிறிலங்கா அமெரிக்க ஈரான் 60 நாள் அமைதி உடன்படிக்கையை வரவேற்று அறிக்கைவிட்டு அமெரிக்காவுக்கு அருகில் சென்றுள்ளது என்பதை சுட்டிக்காட்டும் இலக்கு இந்த காலகட்டத்தை சிறிலங்கா ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கத்தை வேகப்படுத்தப் பயன்படுத்தினால் அனைத்துலக நிலையில் அது கவனம் பெறாது என்கின்ற எச்சரிப்பையும் ஈழத்தமிழர்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

மேலும் அமெரிக்க அரசத்தலைவர் 52வது ஜி7 நாடுகளின் உச்சி மாநாட்டை அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் குறிப்பாக பிரான்ஸ் யேர்மன் இத்தாலி ஆகியவற்றுக்கும் இடையில் நேட்டோ பாதுகாப்பு கட்டமைப்பு தொடர்பாக ஏற்பட்டு வந்த விரிசல் நிலைகளை ஓரளவுக்குச் சீராக்கி எதிர்வரும் யூலை மாத முதல்வாரத்தில் அங்கோராவில் நடைபெறவுள்ள நேட்டோ நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டில் அமெரிக்காவின் நேட்டோ 3வது வேர்சனை அதாவது அமெரிக்க நேட்டோ நாடுகள் எந்த அளவுக்கு நேட்டோ உறுப்புரிமைக்கான அமெரிக்கா எதிர்பார்க்கும் நிதிப்பங்களிப்பைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குத்தான் அமெரிக்காவின் பாதுகாப்பு வழங்கப்படுதலையும் உறுதிப்படுத்தல் என்கிற முற்திட்டத்தைச் சந்தைப்படுத்துவதற்கான வர்த்தக முன் மாநாடாகவே வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளாரென்பது ஆய்வாளர்க ளின் எதிர்வு கூறலாக உள்ளது.

இறைமை என்பது கூட்டாண்மை பங்காண்மைகள் இடையிலான வர்த்தகத்தால் பாதுகாப்புப் பெறும் காலமாக இன்றைய காலகட்டம் உள்ளதென்பதை இது உறுதியாக்கியுள்ளதென்பதை எடுத்துரைக்க விரும்பும் இலக்கு ஈழத்தமிழர்கள் அரசற்ற தேசஇனமாக ( Nation Without State) 22.05. 1972 முதல் இன்று வரை தமிழீழ விடுதலைப்புலிகளின் நடைமுறையரசு செயற்பட்ட 1978 முதல் 2009 வரையான 31 ஆண்டுகள் தவிர்ந்த 23 ஆண்டுகளும் சிறிலங்காவின் படைபல ஆட்சி ஏற்படுத்தும் இனங்காணக்கூடிய அச்சத்துள் வாழும் நிலையில் தங்களுக்குள் தேசிய ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தி மக்கள் இறைமைக்குப் பலமளித்து மக்கள் இறைமையின் அடிப்படையில் தங்களின் பிரிக்க இயலாத தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தித் ஈழத்தமிழர் தாயகத் தேசத்தை மீளவும் மக்களாகக் கட்டியெழுப்பும் பணியில் (Nation Building Process) முழுமையான அர்ப்பணிப்புடன் சனநாயக வழிகளில் மண்ணின் வளத்தையும் மக்களின் மனித வலுவையும் உலகில் உள்ள ஈழத்தமிழர்களின் மூலதனப்பலத்தையும் பயன்படுத்த வல்ல வர்த்தக அணுகுமுறையிலான செயற்திட்டங்களில் ஈடுபட்டே தங்கள் தேசத்திற்கான அனைத்துலக கூட்டாண்மைகளையும் பங்காண்மைகளையும் ஏற்படுத்த முடியும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

மேலும் இன்றைய உலகில் அதிக அளவில் நிச்சயமற்ற தன்மையும் பதற்றமும் காணப்படுவதற்கு உலக அரசியலின் நிசச்யமற்றதன்மை, பொருளாதாரம், சுற்றுச் சூழல் அச்சம் மட்டுமல்ல அதைவிட முக்கியமானதாக நிறுவனங்களிலும் நாளாந்தச் செய்திகளிலும் நம்பிக்கை இழக்கப்பட்டு வருவது உள்ளதென உலகின் மீக நீண்டகால செய்தி முகவராக உள்ள ரொயிட்டர் தனது ஊடகத்துறை குறித்த தனது ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளதென பிரித்தானியாவின் ஆங்கில நாளிதழ் த கார்டியன் உடைய பத்தி எழுத்தாளர் யேன் மார்ட்டின்சன் தனது 19.06. 2026ம் திகதிய “பி பி சி ட்ரம்புக்கும் எலன் மஸ்க்குக்கும் போலிச் செய்திக்கும் தலைசிறந்த ஆயுதமாக அமையலாம் “ என்னும் அவரது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.


தவறான தகவல்கள் செயற்கை நுண்ணறிவு கருவிகள் வழி பரப்பப்படுகிறது. உண்மையான தகவல்கள் மறைக்கப்படுகின்றன அல்லது மறுக்கப்படுகின்றன. எதனைச் செய்ய வேண்டுமோ அதனைச் செய்யாது எதனைச் செய்யக் கூடாதோ அதனை செய்வது ஊடகச் சுதந்திரம் என்ற பெயரில் உலக வழக்காக்கப்பட்டு வருகிறது. இதனால் செய்யப்பட வேண்டியன செயலிழக்க சனநாயக ஆட்சிமுறைமைகள் தனிமனித ஆட்சி முறைமையாக மாறுவது இன்றைய உலகில் நாளாந்த நிகழ்வாக உள்ளது. சனநாயத்தில் உள்நுழைவுகளும் வெளியேறுதல்களும் சனநாயகத்தின் பரிணாம வளர்ச்சி. பரிணாமம் என்றால் முன்பிருந்த அமைப்பியல்கள் தொடர்புகள் எல்லாமே மாறுபட்டு புதிய அமைப்பு புதிய தொடர்பாடல் தோன்றுவதாகும். இதனை சமுகவலைத்தளங்கள் பிரிதல் பிளவுபடுதல் என்ற அணுகுமுறையில் செயற்படுவதை ஏன் பிரிந்தார்கள் எதற்குப் பிரிந்தார்கள் எப்படிப் பிரிந்தார்கள் எனச் செயற்படுவதை விடுத்து ஏற்படும் புதிய நிலையில் எப்படி மக்களுக்குச் சக்தியளித்தல் நடைபெறலாமென்பதை நெறிப்படுத்தினாலே மக்களுடைய பாதுகாப்புடன் கூடிய அமைதி வாழ்வை வளர்ச்சிகளை உறுதி செய்ய மக்களுக்குச் சக்தியளிக்கும் முறையில் ஊடகங்கள் செயற்படும்-செயற்பட வேண்டுமென்பதை இலக்கு இவ்வாரத்தில் வலியுறுத்த விரும்புகிறது.

**ஆசிரியர்**




# விதுரன்

சர்வதேச அரசியலிலும் புவிசார் இராஜதந்திரத்திலும் சிறிய தீவு நாடுகள் எடுக்கும் தன்னிச்சையான முடிவுகள், அவற்றின் உள்நாட்டுப் பொருளாதார அமைப்பிலும் உலகளாவிய நம்பகத்தன்மையிலும் எத்தகைய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு சமகால அமெரிக்க - இலங்கை உறவுகளில் ஏற்பட்டுள்ள கடுமையான விரிசலே மிகச் சிறந்த உதாரணமாகும்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான சிறப்புத் தூதுவர் செர்ஜியோ கோரின் திடீர் இலங்கை விஜயம், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு மற்றும் மேற்கு முனையங்களை உற்றுநோக்கியமை, அதன் தொடர்ச்சியாக அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிய கடலோர காவற்படைக் கப்பல் ஒப்படைப்பு விழாவில் அவரது முகம் காணப்படாமை என்பன வெறும் தற்செயலான நிகழ்வுகள் அல்ல.

மாறாக, உலகளாவிய எரிசக்திப் பாதையான ஹோர்முஸ் ஜலசந்தியை மையப்படுத்தி அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் நிலவும் புவிசார் அரசியல் சதுரங்கத்தில், கொழும்பு எடுத்த முதிர்ச்சியற்ற இராஜதந்திர நிலைப்பாடும், அதன் விளைவாக வொஷிங்டனிடம் இருந்து உத்தியோகபூர்வமாக வெளிப்பட்ட கடுமையான கோபமுமே இதன் பின்னணியில் உள்ளன.




இந்த இராஜதந்திர முரண்பாடு, வல்லரசுகளின் அழுத்தங்களுக்கு மத்தியில் தற்போதைய அநுர அரசாங்கம் கொண்டுள்ள வெளியுறவுக் கொள்கையின் தெளிவின்மையையும், மூலோபாயத் தடுமாற்றத்தையும் சர்வதேச அரங்கில் அப்பட்டமாக அம்பலப்படுத்தியுள்ளது.

இந்தப் பாரிய இராஜதந்திரப் பூசலின் அடிநாதம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிலும் பொதுச் சபையிலும் அரங்கேறிய சர்வதேச அரசியல் நகர்வுகளோடு பிணைந்துள்ளது.

ஈரானால் ஹோர்முஸ் ஜலசந்தி முழுமையாக முடக்கப்பட்டதை அடுத்து, உலகளாவிய கப்பல் போக்குவரத்தை வழமைக்குக் கொண்டுவர அமெரிக்கா பாதுகாப்புச் சபையில் ஒரு விசேட தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

எனினும்,அமெரிக்காவின் புவிசார் அரசியல் எதிரிகளான சீனாவும் ரஷ்யாவும் தங்களின் ‘வீட்டோ’ அதிகாரத்தைப் பயன்படுத்தி இத்தீர்மானத்தைத் தோற்கடித்தன. பாதுகாப்புச் சபையில் முறியடிக்கப்பட்ட தீர்மானத்தை சர்வதேச சட்டங்களின்படி ஐ.நா. பொதுச்சபைக்குக் கொண்டு சென்று, அங்குள்ள உறுப்பு நாடுகளில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்ற அமெரிக்கா தீவிரமாக முயன்றது.

இதற்கமைய தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையில், தெற்காசிய பிராந்தியத்தில் அமெரிக்காவின் பிரதான பங்காளியான இந்தியா முதலாவதாகக் கையெழுத்திட்டதுடன், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளும் வொஷிங்டனின் அழுத்தங்களுக்குப் பணிந்து உடன்படிக்கையை அங்கீகரித்தன.



பாகிஸ்தான் தான் அமெரிக்கா - ஈரான் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஒரு மத்தியஸ்தராகச் செயற்படுவதைக் காரணம்காட்டி, இராஜதந்திரத் தந்திரோபாயத்துடன் இதிலிருந்து விலகிய நிலையில், இலங்கை இந்த விவகாரத்தைக் கையாண்ட விதம் அதன் இராஜதந்திர அறியாமையையே வெளிப்படுத்தியது.

ஆரம்பத்தில் இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகமும், ஐ.நா.கொழும்பு அலுவலகமும் இந்தத் தீர்மானத்தில் கையெழுத்திடுமாறு விடுத்த தொடர் நினைவூட்டல்களுக்குப் பதிலளிக்காது மௌனம் காத்த இலங்கை அரசாங்கம், இறுதியாக எழுத்துபூர்வமாக விடுக்கப்பட்ட அழுத்தங்களின் பின்னர், ‘ஈரான் தரப்பு உள்ளடக்கப்படாமல் முற்றிலும் ஒருதலைப்பட்சமாக இத்தீர்மானம் கொண்டுவரப் பட்டுள்ளதால் இதில் கையெழுத்திட முடியாது’ என்று திட்டவட்டமாக அறிவித்தது.

பாகிஸ்தான் தனது விலகலுக்குப் பின்னால் நியாயமான மூலோபாயக் காரணத்தைக்காட்டி அமெரிக்காவின் கோபத்திலிருந்து தப்பித்துக்கொண்ட வேளையில், இலங்கை எவ்வித சர்வதேச அரசியல் பின்புலமும் இன்றி, ஈரானுக்காக வாதாடி அமெரிக்காவை நேரடியாகப் பகைத்துக்கொண்டமையானது ட்ரம்ப் நிர்வாகத்திற்குப் பெரும் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது.



இதன் நேரடி இராஜதந்திர சமிக்ஞையாகவே, தான் கலந்துகொள்ளப் போவதாக முன்கூட்டியே அறிவித்திருந்த கடலோர காவல்படைக் கப்பல் ஒப்படைப்பு விழாவை செர்ஜியோ கோர் முற்றாகப் புறக்கணித்தார்.

அமெரிக்கா வழங்கிய கப்பல் மற்றும் ஹெலிகொப்டர்களைப் பெற்றுக்கொள்ளும் பிரம்மாண்ட விழாவில், அக்கொடையின் பின்னணியில் இருந்த சிறப்புத் தூதுவரே வராமல் தவிர்த்தமையானது, புதிய அரசாங்கத்திற்கு வொஷிங்டன் விடுத்த பகிரங்கமான இராஜதந்திர எச்சரிக்கையாகும்.

இந்த இராஜதந்திரக் கோபத்தின் தொடர்ச்சியாக, அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் இலங்கை உள்ளிட்ட நாடுகள் மீது மேலும் 12.5சதவீதம் கூடுதல் சுங்கவரியை விதிக்கப் பரிந்துரைத்துள்ளமையானது இலங்கையின் பொருளாதார முதுகெலும்பைக் தட்டிப்பார்க்கும் பழிவாங்கல் நடவடிக்கையாகும்.

‘கட்டாய உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலகச் சந்தைக்கு வருவதைத் தடுக்கத் தவறியமை’ என்ற குற்றச்சாட்டின் கீழ், இலங்கை உள்ளிட்ட 45நாடுகளுக்கு இந்த வரிவிதிப்பு உத்தேசிக்கப் பட்டுள்ளது.



இலங்கையின் ஆடைத்தொழிற்துறையானது தமக்கான மூலப்பொருட்களில் பெரும்பகுதியை சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கிறது. இந்தச் சீன, ரஷ்ய மூலப்பொருட்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் ஆடைகளின் பிரதான ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்காவே விளங்கும் பின்னணியில், ஏற்கனவே நடைமுறையிலுள்ள 20சதவீத சுங்கவரியுடன் இந்த 12.5சதவீத கூடுதல் வரியும் இணையும் போது, அமெரிக்கக் கொள்வனவாளர்கள் இலங்கைப் பொருட்களுக்கு அதிகவிலை கொடுக்க வேண்டியிருக்கும். இதனால் சர்வதேச சந்தையில் இலங்கையின் ஆடை ஏற்றுமதித்துறை தனது போட்டித்தன்மையை முற்றாக இழந்து, பாரிய வேலைவாய்ப்புப் பறிப்புகளையும், நாட்டின் பிரதான வெளிநாட்டு வருமான வீழ்ச்சியையும் சந்திக்க நேரிடும்.

அமெரிக்கா எடுத்த இந்த அதிரடிப் பொருளாதார நகர்வு, இராஜதந்திர ரீதியாகத் தடம்மாறும் சிறிய நாடுகளை அமெரிக்கா எவ்வாறு பொருளாதாரக் காரணி மூலம் பணிய வைக்க முற்படுகிறது என்பதைக் காட்டுகிறது.

மறுபுறம், இலங்கைக்கு மிக அருகில், காலிக்குத் தெற்கே சர்வதேச கப்பல் பாதையில் அமெரிக்க இந்தோ-பசிபிக் கட்டளையகத்தின் சிறப்புப் படையினர் நடத்திய வான்வழி அதிரடித் தாக்குதலும், ஈரானிய மசகு எண்ணெயைக் கடத்திய ‘லெனோரே’ (எம்.ரி.டவினா) கப்பலைக் கைப்பற்றியமையும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இலங்கை கடல் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் அமெரிக்காவின் இராணுவக் கண்காணிப்பு

**தொடர்ச்சி: பக்கம் 15**




பா.அரியநேத்திரன்

தாய்க்கட்சி என அழைக்கப்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட தொகுதிக் கிளை கூட்டம் கடந்த 31.05.2025ம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது அந்த கூட்டத்தின் பின்னர்

நிர்வாக செயலாளரும் மூத்த உறுப்பினருமான திரு குலநாயகம் சகல மத்திய குழு உறுப்பினர்களுக்கும் கடந்த 02.06.2025 ஒருகடிதம் அனுப்பியிருந்தார், அந்த கடிதத்தில் தமிழரசுக்கட்சியின் 77 ஆண்டு கால வர லாற்றில் இடம்பெறாத சம்பவங்கள் எல்லாம் இப்போது திணிக் கப்படுகின்றன. ஜனநாயக ரீதியான செற்பாடுகளில் கவனம் செலுத்தவேண்டுமென கூறுகின்ற கட்சியானது அடாத்தும் சண்டித்தனமும் மேலோங்குவதாகத் தோன்றுகிறது. கறையான் புற்றெடுக்க கொடிய நாகங்களும், விச யந்துக்க ளும் குடிகொண்டு சங்கடம் கொடுக்கும் நிலை உள்ளது அதற்கு கட்சியை அந்த நிலைக்குத் தள்ளிவிட முடியாது, கட்சியுடனான எனது 62 ஆண்டுகாலச் செயற்பாடுகளை எண்ணிப் பார்க்கிறேன்.



வழிப்போக்கனாக இருந்துவிட்டு பதவி பெறுவதற்காக கட்சியில் சேர்ந்து இலாபம் அல்லது ஏதும் உதவி பெற்றவன் அல்ல நான். இலங்கைத் தமிழரசுக்கட்சி மீது இருக்கும் பேரார்வத்தாலேயே இக் கடிதத்தினை எழுதுகிறேன். இதனை மத்திய செயற்குழுவில் ஆய்வு செய்து தகுந்த தீர்வைக் காணவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். கடந்த தலைமைச் செயலகத்தில் 31.05.2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இடம்பெற்ற தலைவர் தெரிவு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததும் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும். என தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவர் சேவியர் திரு குலநாயகம் அந்த கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

நிர்வாக செயலாளர் குலநாயகம் இவ்வாறு எழுதிய கடிதம் தொடர்பாக இலங்கைத்தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனால் பதில் கடிதம் ஒன்று ஊடகங்களில் வெளிவந்தது.

அந்த கடிதத்தில் அனைத்துத் தெரிவுகளும் முடிந்த பின்னர், உடுப்பிட்டிக் கிளைத் தலைவர் எழுந்து, திரு. குலநாயகம் ஒரு பதவிக்கும் தெரிவாகவில்லையே என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திய போது, உடுப்பிட்டித் தொகுதியில் இருந்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் தான் இராஜினாமா செய்ய முன் வந்தார். ஆனால் திரு. குலநாயகம் அதை நிராகரித்து விட்டார். இதுவே கூட்டத்தில் நடந்தது. இந்த விடயங்களை திரு. குலநாயகம் அவர்களே பதிவும் செய்தார். கூட்ட நடவடிக்கையில் எவ்விதமான முறைகேடான விடயமும் நடைபெறவில்லை. திரு. குலநாயகமோ வேறு எவருமோ இறுதியில் எந்த ஆட்சேபனையையும் எழுப்ப வில்லை. என அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இருவருடைய கடிதங்களுக்கு அப்பால் மேலதிகமாக யாழ் மாவட்ட இளைஞர் அணித் தலைவர் கந்தசாமி பிருந்தாபன் கடந்த 13.06.2026ல் தமிழரசுக்கட்சி விட்ட தவறுகளை சுட்டிக்காட்டி விரிவான கடிதம் ஒன்றை மத்தியகுழுவுக்கு முறையிட்டுள்ளார்.

அந்த கடிதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக்கிளை மற்றும் தொகுதிக்கிளைகளுக் கான புதிய நிர்வாகத் தெரிவுகள், கட்சியின் யாப்பு விதிகளுக்கு முரணான வகையிலும் முறைகேடான முறையிலும் நடத்தப்பட்டுள்ளதாக நான்கு விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார், அந்த நான்கு முக்கிய குற்றச்சாட்டுகள் வருமாறு

1. காங்கேசன்துறை தொகுதி நிர்வாகத் தெரிவில் முறைகேடு: கடந்த 2025 அக்டோபர் 21 அன்று, காங்கேசன்துறைத் தொகுதிக்கான நிர்வாகத் தெரிவு யாப்பு விதிகளுக்கு முரணாக நடத்தப்பட்டுள்ளது. மாவட்டத் தலைவர் மற்றும் செயலாளருக்குத் தெரியாமலும், ஏற்கனவே இயங்கி வரும் தொகுதி நிர்வாகத்திற்கு அறிவிக்காமலும், கட்சி யின் பதில் தலைவர் மற்றும் பதில் செயலாளரால் குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் மட்டும் அழைக்கப்பட்டு இந்தத் தெரிவு நடத்தப்பட்டுள்ளது. இது குறித்து தொகுதி நிர்வாகிகள் ஏற்கனவே கட்சியிடம் உத்தியோகபூர்வமாக முறையிட்டுள்ளனர்.

2. வட்டுக்கோட்டைத் தொகுதி தெரிவில் யாப்பு மீறல்: கடந்த 2026 ஏப்ரல் 23 அன்று, வட்டுக்கோட்டைத் தொகுதியில் ‘வெற்றிடம் நிரப்புதல்’ என்ற பெயரில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது. இதன்போதும் மாவட்டத் தலைவருக்கும், செயலாளருக்கும் அறிவிக்கப்படாமல்பதில் தலைவர் மற்றும் பதில் செயலாளரால் குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் தொலைபேசி மூலம் அழைக்கப்பட்டுள்ளனர். பிரதேச சபை உறுப்பினர்களைக் கொண்டும், காரைநகர் பிரதேசத்தையும் இணைத்தும் நடத்தப்பட்ட இந்தத் தெரிவு யாப்பு விதிகளுக்கு முரணானது என ஊடகங்களில் செய்திகள் வெளியானதோடு, தொகுதி உறுப்பினர்களும் கட்சி நிர்வாகத்தினரும் முறையிட்டுள்ளனர்.



3. யாழ் மாவட்ட கிளையின் அராஜகமான அதிகார துஷ்பிரயோகம்: கடந்த 2026 மே 31 அன்று, யாழ் மாவட்ட கிளை உத்தியோகத்தர் தெரிவுக் கூட்டத்தில் நடைபெற்றுள்ளது. மாவட்டத் தலைவர் இல்லாத நிலையில், கட்சியின் பதில் பொதுச் செயலாளரே இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கியிருந்தார். இதன்போது, புதிய நிர்வாகத் தெரிவு குறித்து உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பம் கோரியும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. “தலைமைப் பீடத்தில் (Table) இருந்து தெரிவு செய்யப்பட்டால், அதற்கு எதிராக மறு தெரிவு கோரக் கூடாது” என மிரட்டும் தொனியில் பதில் பொதுச் செயலாளர் எச்சரித்துள்ளார். ஜனநாயகக் கட்சியில் அங்கத்தவர்களின் கருத்துக்களைக் கேளாது நடத்தப்பட்ட இந்த அராஜகமான, ஜனநாயக விரோதச் செயல், ஜனநாயகத்திற்குச் சாவுமணி அடிப்பது போல் அமைந்துள்ளதாக கடிதத்தில் சாடப்பட்டுள்ளது.

4. நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் முன்னெடுக்கப்பட்ட தெரிவு: கடந்த தலைவர் தேர்தலின் போது, ‘தொகுதி’ என்பது ‘பிரதேச ரீதியானது’ என மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டு, வலிகாமம் தென்மேற்கு மற்றும் வலிகாமம் தெற்கு என இரு பிரதேச பிரிவுகளாக பொதுச்சபைக்கு தலா 5 பேர் வீதம் (மொத்தம் 10 பேர்) தெரிவு செய்யப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது. இந்த நிர்வாக நடைமுறைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில், நீதிமன்ற வழக்கை மதிக்காமல், ஏற்கனவே பிரதேச பிரிவாக இருந்த நிர்வாக முறையை தற்போது மீண்டும் ‘தொகுதி’ என ஒன்றாக இணைத்துத் தெரிவு செய்தமை எந்த அடிப்படையில்? யாருடைய தீர்மானம்? என்ற கேள்விகளை யும் அவர் எழுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்முரண்பாடுகள் தற்போது யாழ்ப்பாண மாவட்ட தொகுதிக் கிளைகள், மற்றும் மாவட்ட கிளைகளுக்கு புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு முறைகேடாக யாப்புக்கு முரணாக இடம்பெற்றுள்ளது என



யாழ்ப்பாண மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணி தலைவர் கந்தசாமி பிருந்தாபன் மத்திய குழு உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளமை தொடர்பாக எப்போது மத்தியகுழு கூடுவது என்ன முடிவு எடுப்படும் என்பது ஒருபுறம் இருக்க, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தொடர்பாக மீண்டும் அதன் பதில் பொதுச்செயலாளர் கடந்த 2026, யூன், 15, ல் ஊடகசந்திப்பில் பாராளுமன்ற குழுவில் இருந்து யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை அரசியல்குழுவிலிருந்து நீக்கியதை நியாயப்படுத்தி நான்கு காரணங்களைக்குறிப்பிட்டிருந்தார்.

சட்டமா அதிபர் நியமனம் , புனரமைப்பு நியமனம் என்பவற்றில் தவறானவர்களுக்கு ஆதரவளித்தாக காரணம் கூறியிருந்தார், குறிப்பாக இராணுவ அதிகாரியை நியமிக்க ஆதரவளித்தார் என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதனால் அவரை நீக்கி சாணக்கியனை நியமித் ததாகக்கூறியிருந்தார். ஆனால் சாணக்கியனை விட மூத்த பாராளுமன்ற உறுப்பினர்களாக மட்டக்களப்பு ஸ்ரீநேசன், அம்பாறை கோடீஷ்வரன் ஆகிய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில் ஏன் சாணக்கியனை நியமித்தார் என்பதை அவர் சொல்லவில்லை அதற்கான காரணம் தமது அணியை சேர்ந்தவர் என்பதாலும், ஸ்ரீநேசன், கோடீஷ்வரன் சிறிதரன் அணியை சேர்ந்தவர்கள் என்பதால் அதனை செய்யவில்லை என்பதே அவரால் கூறப்படாத உண்மை.

தந்தை செல்வாவால் 1949, டிசம்பர்,18, ல் ஆரம்பித்த தாய்க்கட்சி என கூறப்படும் இலங்கை தமிழரசுக்கட்சி கடந்த 2024, ஜனவரி,21, ல் இருந்து இன்றுவரையும் ஏறக்கு றைய இரண்டரை வருடங்களாக இரண்டு அணியாக செயற் படுவதே தொடர் முரண்பாடுகளுக்கு காரணமாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நீண்டகாலமாக நிலவிவரும் உட்கட்சி முரண்பாடுகள், தத்துவார்த்த வேறு பாடுகள், தலைமைப் பதவிக்கான போட்டிகள் மற்றும் தேர்தல் வியூகங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளன.

முக்கிய முரண்பாடுகள் மற்றும் பிளவுகளுக்கான அடித்தளமாக அமைந்தது கடந்த 2024,ஜனவரி,21, ல் இடம் பெற்ற ஜனநாயக ரீதியிலான வாக்கெடுப்பு மூலமான

தொடர்ச்சி: பக்கம் 14




தீபச்செல்வன்

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலைப் போரின் ஆயுதச் சத்தங்கள் அடங்கினாலும் அதன் முடிவற்ற விளைவுளை இன்னமும் ஈழப் பெண்களைத் துரத்திக்கொண்டுதான் இருக்கிறது. வெடிபொருட்களின் சத்தங்கள் மௌனமாகிவிட்டன. போரின் வரைபடங்கள் அரசியல் அலுவலகங்களின் கோப்புறைகளுக்குள் தள்ளப்பட்டுவிட்டன. ஆனால் வடக்கு-கிழக்கின் ஆயிரக் கணக்கான தமிழ்ப் பெண்களின் வாழ்க்கையில் போர் இன்னும் முடிவடையவில்லை. அது அவர்களின் உடல்களில் காயமாகவும், நினைவுகளில் இரத்தக்கறையாகவும், அன்றாட வாழ்வில் தீராத அழுத்தமாகவும் தொடர்கின்றது.

### போரைச் சுமந்த பெண்கள்

போர் உலகம் முழுவதும் பெண்களைத்தான் முடிவற்ற பாதிப்புக்குள் தள்ளுகிறது. ஈழத்திலும் அதுதான் மெய்யான நிலை. இனப்படுகொலைப் போரின் இறுதி நாட்களில் உயிர்களை மட்டுமல்ல, எண்ணற்ற குடும்பங்களின் எதிர்காலங்களும் புதைக்கப்பட்டன. அந்தப் புதைகுழிகளின் விளிம்பில் இன்னும் காத்திருப்பவர்கள் பெண்கள். அவர்கள் தாய்மார்கள். அவர்கள் மனைவிமார்கள். அவர்கள் சகோதரிகள். அவர்கள் மகள்கள். போருக்குப் பிந்தைய இலங்கையின் நீதியற்ற விளைவுகளைத் தமது உடல்களிலும் உள்ளங்களிலும் சுமந்துகொண்டு நடமாடும் ஈழப் பெண்கள் உயிருள்ள சாட்சியங்கள் எனலாம்.



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதை ஈழப் பெண்களை ஒரு முடிவற்ற போரில் தள்ளியிருக்கிறது. மரணம் ஒரு முடிவு. ஆனால் காணாமல் ஆக்கப்படுதல் என்பது முடிவற்ற துயரப்படலம். அது வீடுகள் தோறும் கதவின் வாசலில் நின்றுகொண்டிருக்கும் நெடிய காத்திருப்பு. அது ஒவ்வொரு தொலைபேசி அழைப்பின் பின்னாலும் மறைந்திருக்கும் நம்பிக்கை. அது ஒவ்வொரு இரவிலும் மீண்டும் உயிர்ப் பெறும் கேள்வி. "என் பிள்ளை இன்னும் உயிரோடு இருக்கி றாரா?" என்கிற நம்பிக்கையும் கேள்வியையும் பெண்கள் சுமக்கின்றனர்.

வடக்கு-கிழக்கின் வீதிகளில் புகைப்படங்களைத் தாங்கிக்கொண்டு நிற்கும் அந்தத் தாய்மார்களின் முகங்களைப் பார்த்தால் போரின் முடிவற்ற பாதிப்பை உணரலாம். அவர்களின் கண்களில் வயதைக் காட்டிலும் அதிகமாகக் காட்சியளிப்பது காத்திருப்பின் சோர்வு. ஆயிரக்கணக்கான நாட்களாக அவர்கள் போராடுகின்றனர். நீதிமன்றங்களின் வாசல்களில், அரச அலுவலகங்களின் முன்பாக, வெயிலிலும் மழையிலும் நின்று போராட்டையே வாழ்வென கொண்டு இருக்கின்றனர். ஆனால் அரசின் பதிலோ கொடிய மௌனம். விசாரணை என்ற பெயரில் காலதாமதம். நல்லிணக்கம் என்ற பெயரில் மறதி. இவ்வாறு நீதியை ஒத்திவைப்பதே போருக்குப் பிந்தைய இலங்கையின் அரசியலாக நீள்கிறது.

### பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

போருக்குப் பின்னர் உருவான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வடக்கு-கிழக்கில் பல்வேறு நெருக்கடிகளையும் போராட்டங்களையும் சந்திக்கின்றனர். ஆயிரக்கணக்கான பெண்கள் ஒரே நேரத்தில் தாயாகவும் தந்தையாகவும் மாறினர். குடும்பத்தின் உணவுத் தேவையிலிருந்த குழந்தைகளின் கல்வி வரை அனைத்தையும் அவர்கள் பொறுப்பேற்ற வேண்டிய நிலையில் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களுக்கான அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவுகள் மிகக் குறைவாகவே உள்ளன. ஒரு சமூகத்தின் சிதைவுகளைத் தாங்கிக்கொண்டு நிற்கும் பெண்களின் தோள்களில் முழு குடும்பங்களும் சுமத்தப்பட்டன.



இந்தப் பெண்களின் வறுமையைப் பயன்படுத்திக் கொண்டதே நுண்கடன் நிறுவனங்கள். போரால் உடைந்த குடும்பங்களின் கதவுகளைத் தட்டியவாறு அவை வந்தன. நெருக்கடியான சமயத்தில் உதவியைப் போல, கைகொடுப்பைப் போலத் தென்பட்ட நுண் கடன்கள் பின்னர் சங்கிலிகளாக மாறின. வட்டியின் மீது வட்டி ஏறிக்கொண்டே போனது. கடனை அடைக்க மீண்டும் கடன் வாங்க வேண்டிய நிலை உருவானது. ஒரு காலத்தில் இராணுவ முற்றுகைக்குள் வாழ்ந்த பெண்கள், போருக்குப் பிறகு நிதி நிறுவனங்களின் முற்றுகைக்குள் சிக்கிக்கொண்டனர்.

இந்தக் கடன் வலையின் பின்னால் எண்ணற்ற கண்ணீர்க் கதைகள் இருக்கின்றன. தமது திருமண நகைகளை இழந்த பெண்கள். வீட்டு காணிகளை விற்ற பெண்கள். கடன் வசூலிப்பாளர்களின் அவமானப்படுத்தல்களைத் தாங்க முடியாமல் உயிரை மாய்த்துக்கொண்ட பெண்கள். மன்னாரில் கடனுக்காக தனது சிறுநீரகத்தை விற்ற முன்னாள் பெண் போராளியின் கதையை சமீபத்தில் அறிந்து உலகத் தமிழ் சமூகமே கண்ணீர் விட்டது. போரின் போது பீரங்கிகள் செய்த அழிவுகளை, போருக்குப் பின்னரான காலத்தில் நுண்நிதிக்கடன் செய்து முடிக்கின்றன.

### பொருளாதார நெருக்கடியில் பெண்கள்

அண்மைய காலங்களாக இலங்கையை வாட்டிப் போடுகின்றனள பொருளாதார நெருக்கடி பெண்களின் இந்த நிலையை மேலும் மோசமாக்கியது. வாழ்வதற்கான செலவு நாளுக்கு நாள் உயர்ந்தது. ஆனால் வருமானம் உயரவில்லை. இதனால் பிள்ளைகள் பட்டினியோடு வாழ்வதை காணுகின்ற யுகத்திற்குப் பெண்கள் தள்ளப்பட்டனர். போருக்குப் பிறகான சூழலில் அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பெயரளவில் பலவேலைகளைச் செய்தாலும் அது பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளப் போதுமானதாக இல்லை.




வேலைவாய்ப்பின்மை காரணமாக ஆயிரக்கணக்கான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் புலம் பெயர்கின்றனர். அவர்கள் வெளிநாட்டுக்குச் செல்லும் விமானங்களில் ஏறும்போது, வெறும் தொழிலாளர்களாக அல்ல; குடும்பங்களின் கடைசி நம்பிக்கையாகப் புறப்படுகின்றனர். ஆனால் அங்கு அவர்களை எதிர்கொள்வது பல நேரங்களில் சுரண்டலும் பாதுகாப்பின்மையும் ஆகும். அவர்கள் அனுப்பும் பணம் வீடுகளைத் தாங்கினாலும், அவர்கள் இல்லாத வெற்றிடத்தை எந்தப் பணமும் நிரப்ப முடியாது. தாயின் குரலை தொலைபேசியில் மட்டும் கேட்டு வளரும் குழந்தைகள், வடக்கு-கிழக்கின் புதிய சமூகச் சோகமாக மாறியுள்ளனர்.



### இராணுவமயத்தின் விளைவுகள்

இப்படியாகப் பல போராட்டங்களைப் பெண்கள் எதிர்கொள்ளுகின்ற நிலையில், வடக்கு-கிழக்கின் நிலப் பரப்பில் இன்னும் இராணுவத்தின் நீண்ட ஆக்கிரமிப்பு நிழல் படர்ந்துகொண்டே இருக்கிறது. போர் முடிந்ததாக

தொடர்ச்சி: பக்கம் 16




கலாநிதி ஸ்ரீஞானேஸ்வரன்

“நாம் இருப்பதால் தான் நான் இருக்கிறேன்” (I am becouse we are) என்கிறது “உபிந்து” என்ற ஆபிரிக்கத் தத்துவம்.

ஈழத்தமிழர்கள் தமது தேசியத் தலைவராக வரித்துக்கொண்டவர் ஈழத்தமிழர்கள் என்றால் யார், எவ்வாறான அடையாளங்கள் அவர்களுக்கு உரியது என்பதை, மிகத் தெளிவாக வரையறுத்து அந்தப் பண்பாட்டு அடையாளங்களை ஈழத்தமிழர்களின் மனங்களில் ஆழப்பதிந்தும் விட்டார்.



தமிழ்த் தேசிய வாழ்வியலில்தான் தமிழ்த் தேசிய வாதம் தங்கியிருப்பதாக “நாளாந்த தேசியம்” என்ற கட்டுரை வலியுறுத்துகிறது. (Fr.Elilrajan)எமது பார்வைப் பரப்பில் முக்கியமற்றவைகளாக இருக்கின்றவைகள் கூட தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவைகளாக, தேசத்தை நினைவூட்டுகின்ற குறியீடுகளாக இருப்பதை இக்கட்டுரை சுட்டிநிற்கிறது. இதனடிப்படையில் ஈழத்தமிழரின் பண்பாட்டு வாழ்வியல்அவர்களின் அடையாளத்தை நிலைநிறுத்தும் வலுக்கொண்டது என்பதை இங்கு புரிந்துகொள்ளலாம்.




ஈழத்தமிழினப்படுகொலையின்முக்கியநோக்கங்களில் ஒன்றாக அவர்களின் தேசிய அடையாளங்களை அழித்துவிட வேண்டும் என்ற எண்ணம் இன்றுவரை சிங்கள பௌத்த பேரினவாத அரசாலோ அவ்வரச முகமூடிகளுக்குள் ஒழிந்து நின்று இனப்படுகொலையைத் தொடர்ந்து நடாத்திவரும் அனைத்துலக அரசுகளாலோ எட்டப்படாமலிருப்பதற்கான காரணம் ஈழத் தமிழர்களின் தேசியத் தலைவர் ஈழத்தமிழரின் மனங்களில் பதிந்த அந்தப் பண்பாட்டு வாழ்வியல்தான்.

அவ்வாழ்வியலின் முக்கிய அடையாளங்களை நாம் கோட்பாடுகளாகவும், நிறங்களாகவும், கோசங்களாகவும், திரட்சிகளாகவும் இங்கு காண்கிறோம். மஞ்சளும், சிவப்பும், கறுப்பும் நிறங்களாக, தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவை என்றும் சமரசம் செய்யப்பட முடியாத கோட்பாடுகளாக ஈழத்தமிழரின் வாழ்வியலில் பதியப்பட்டுவிட்டது. மே 18, ஆம் திகதியிலும் நொவம்பர் 27 ஆம் திகதியிலும் ஈழத்துத் தமிழ் மக்கள் திரட்சியாகக் கூடுவதும் அவர்களது இனத்தில் நிகழ்ந்த இனப்படுகொலையையும்,தியாகங்களையும்உரிய திகதிகளில் நினைவுகூர்வதும் ஆண்டுகள் தோறும் தொடர்வதைக் காண்கிறோம்.



அதுமட்டுமன்றி “எழுக-தமிழ்“, “பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை“ போன்ற போராட்டங்கள் உட்பட ஏனைய அனைத்து திரட்சிகளிலும் “எமது நிலம் எமக்கு வேண்டும் – எமது கடல் எமக்கு வேண்டும்” என்ற கோசங்கள் உணர்த்துவதும் அதனைத்தான்.

”நாம் - ஈழத்தமிழர்கள்” என்ற பொது அடையாளத்துடன் ஈழத்தமிழர்களை அவர்களின் அடையாளங்களுடன் திரட்சியடையச் செய்வதன் ஊடாக “நாம் இருப்பதால்தான் நான் இருக்கிறேன்“ என்ற அவர்களது தலைமையின் இருப்பு முடிவற்றுத் தொடர்கிறது.

சமகாலத் தந்திரோபாய தலைமைத்துவக் கோட்பாட்டு வலியுறுத்தும் தலைமையின் பௌதீக இருப்பு முக்கியமானதல்ல என்ற பிந்திய ஆசிய வடிவங்களுள் ஒன்றாக இதனைக் காணமுடியும்.

இதன்படி தந்திரோபாயத் தலைமையின் முக்கிய நகர்வான தொலைநோக்கை வடிவமைத்துக்கொள்வது (1) என்பதில் ஈழத்தமிழர்களின் தலைவர் உச்ச வெற்றியடைந்துவிட்டார்.ஈழமுட்பட உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் அத்தொலைநோக்கை நோக்கித் திரள்வதுஅதனையே வெளிப்படுத்தி நிற்கிறது. அத்தொலைநோக்கு எவ்வாறு உருவாகியது என்பதை நாம் மீள ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் இன்று யதார்த்தமான அல்லது அடையக்கூடிய தீர்வுகளை நோக்கி நாம் நகரலாம் எனப் பலர், விலைபோன பத்தியாளர்கள் உட்பட, கதைப்பதைக் காண்கிறோம்.



வரலாற்றில் முதன் முதலில் 1918இல் எழுத்துமூலம் ஈழத்தமிழ் மக்களுடன் சிங்களப் பேரினவாதம் ஒரு உடன்படிக்கையைச் செய்தது. அவ்வுடன்படிக்கை 1921 இல் தூக்கி யெறியப்பட்டது. (வரலாறு சொல்லும் பாடம் – தமிழீழ கல்விக் கழக வெளியீடு – நூலகம்)

அன்றிலிருந்து இக்கட்டுரை எழுதப்படும் வரை எத்தனையோ உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன. யதார்த்தம் உடைந்து போனது.

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் இங்கு குறிப்பிடப்படும் யதார்த்தமான அல்லது அடையக்கூடிய அனைத்துத் தீர்வுகளையும் முயற்சித்துப் பார்த்தவர்களின் வரிசையில் தந்தை செல்வா மிக முக்கியமானவர்.



நிறைவாக அவர், கூட்டாட்சி முயற்சிகள் யாவும் தோல்வியடைந்த நிலையில் ஈழத்தமிழர்களின் மீது

தொடர்ச்சி: பக்கம் 08

## தலைவருடன் தொடரும் ... தொடர்ச்சி...

கட்டவிழ்த்து விடப்பட்ட ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதத்திலிருந்து தமது இனத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும், அவர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வாகவும்,50 ஆண்டுகளுக்கு முன்னர் தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். அப்பிரகடனமே ஈழத்தமிழர்களின் தொலைநோக்காக உருவெடுத்தது.



அப்பிரகடனத்தினைபோராட்டவடிவமாகபெயர்த்து அதனை ஈழத்தமிழினத்தின் தேசிய வாழ்வியலாக்கி அவற்றைச் செயற்படுத்தவென மனவுறுதியுடன் கூடிய தியாகத்தைப் புரியத்தக்கதொரு மனிதப் பெருவலுவையும் ஈழத்தமிழர்களின் தேசியத்தலைவர் முன்வைத்து அதன்பால் இறுதிவரை அவர் பயணித்தார்.

ஒரு பெரும் பயணத்திற்குத் தியாகம் ஏன் முக்கியமானதாக அமைகிறது என்பதை வரலாறுகள் எமக்குக் கற்றுத்தரும். அவ்வாறான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தியாகமொன்றை நாம் இங்கு நினைவுகொள்ளலாம்.



பெருமகனார் இயேசுவிற்கு முன் கிறிஸ்தவம் ஒரு மதமாக இருக்கவில்லை. ஆனால் தனது உடலில் சிலுவையைச் சுமந்து தன்னை மக்களுக்காக ஒப்புக்கொடுத்தபின் மக்கள் அவரது வாழ்க்கை, போதனைகள், மரணம், உயிர்த்தெழுதல் என்பவற்றினை மொத்தமாக ஒரு கோட்பாடாக, மதமாக,ஏற்றுக்கொண்டு, இயேசுபிரானின் இன்மையின் பின்னரும் இன்றுவரை மக்கள் தாங்கிச் செல்வதற்கு அடிப்படையாக அமைந்தது அவரது தியாகம்.

அவ்வாறே, தான் முன்னகர்த்திய தொலைநோக்கை அனைத்து ஈழத்தமிழர்களையும் வரித்துக் கொள்ளு மாறுஈழத்தமிழர்களின் போரியல் தியாகம் நிர்ப்பந்தித்திருந்தது.




உலகின் எல்லா இனங்களிலும் இருப்பவர்களைப் போலவேஅந்த நிர்ப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாரற்ற ஈழத்தமிழர்கள் அதற்கு எதிராகச் செயற்படத் தொடங்கினார்கள். அது சாதாரணமானது தானே. உலகின் எல்லா இனங்களிலும் இருப்பவர்களைப் போலவே வெள்ளிக்காசுக்கு விலைபோனார்கள். அது அதைவிட சாதாரணமானது.

ஈழத்தமிழின அடையாளத்தை இனப்படுகொலையின் ஊடாக அழித்துவிடலாம் என்ற திட்டம் பொய்த்துப் போனதால் அத்திட்டத்தை முன்னெடுத்த தரப்புகள் ஈழத்தமிழினத்தின் தொலைநோக்கை தவறானது என்றும், அடையமுடியாதது என்றும், யாதார்த்தமற்றது என்றும் விலைபோனவர்களை முன்நிறுத்தி நிறுவமுற்படுவதன் பின்னணியைப் பற்றிப் பார்க்கலாம்.

பூகோளப் போட்டியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புள்ளியில் ஸ்ரீலங்கா அமைந்திருப்பது அதன் சாபம் என மறைந்த மதிப்புமிகு விராஜ் மெண்டிஸ் உட்படப் பலர் வலியுறுத்தியிருந்ததை மீளவும் மிக அண் மையில் கலாநிதி. தரினி ராஜசிங்கம் சேனநாயக்க வலியுறுத்தியிருந்தார். (2) ஏனைய நாடுகளில் நடைபெறும் விடுதலைப் போராட்டங்களிலிலிருந்து ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒட்டுமொத்தமாக வேறுபடுத்தும் காரணி இந்தப் பூகோள அமைவிடம் தான்.

அதன் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள மிக அண்மையில் காலிக்குத் தெற்காக சுமார் 40 கடல் மைல் தொலைவில் (74 Kilo Meter) ஈரானின் விரைவுப் போர்க் கப்பல் மீது அமெரிக்க நீர்மூழ்கி நடாத்திய தாக்குதலைக் குறிக்கலாம்.




இத்தாக்குதலானது மேற்குலகும் எஞ்சிய உலகிலுமான (The West and the Rest) பெருவல்லரசுகளின் அதிகார அரசியல் போட்டிக்கான இரண்டாம் நிலை அரங்காக அல்லது போர்க்களமாக இந்துமாகடலை உருவாக்கிக் கொள்வது என்ற வல்லாதிக்கக் கனவை நனவாக்கியுள்ளது. (3) இவ்வல்லாதிக்கச் சிந்தனையை முழுவதுமாகச் செயற்படுத்த ஸ்ரீலங்காவில் கையாளக் கூடிய பொம்மை அரசொன்றே இருக்கவேண்டும் என்பதை பெருவல்லரசுகள் புரிந்து வைத்திருந்தன. ஸ்ரீலங்காவிற்குள் இணைக்கப்பட்டுள்ள தனது நாட்டை மீட்கப் பாடுபடும் ஈழத்தமிழர்களின் தலைமை தனது ஒருபோதும் விலைபோகாத பண்பினால் பொம்மை அரசின் உருவாக்கத்திற்குப் பெரும் சவாலாக அமைந்திருந்தது.



அத்துடன் இந்த இரு பிரிவு வல்லரசுகளும், அதன் துணைநாடுகளும் ஸ்ரீலங்கா அரசிற்கு உதவிகளை வழங்கிக்கொண்டு இந்து மா கடலுடன் இணைந்த ஈழக்கடற்பரப்பில் பயணம் செய்யுமானால் அக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் சட்ட அங்கீகாரத்தைத் தாம் பெற்றிருப்பதாக1990களின் ஆம்பத்திலிருந்தே புலிகள் உத்தியோகப்பற்றற்ற வகையில் பல தடவைகள் தெரிவித்து வந்தார்கள்.

இத் தொடர்ச்சியாக செம்டெம்பர் 9, 1997இல் சீனாவிற்குச் சொந்தமானதும் அந்நாட்டு மாலுமிகள் மற்றும் பணியாளர்களைக் கொண்டிருந்ததும், அமெரிக்காவினால் வாடகைக்கமர்த்தப்பட்டு அந்நாட்டுக் கொடியுடன் திருகோணமலை, புல்மோட்டையில் இல்மனைட் ஏற்றிக் கொண்டிருந்த கப்பலின் மீதான தாக்குதலைச் செய்தனர். அதன் பின்னர்உத்தியோகபூர்வமாக வெளியிட்ட அறிக்கையினூடாக துல்லியமான செய்தியொன்றை மேற்குலகும் எஞ்சியவையும்கற்றுக்கொண்டன. (4) இச் சவால்களை நீக்குவதற்குத் தமிழினத்தின் போராட்ட வலுவைச் சிதைப்பது பெருவல்லரசுகளுக்கு இன்றியமையாததாக இருந்தது.

ஒக்டோபர் 8, 1997இல் தடை செய்யப்பட்ட பன்னாட்டுப் பயங்கரவாத அமைப்பாகப் புலிகளை அமெரிக்கா பட்டியலிட்டது. (5) பின்பு செப்டெம்பர் 2001 இல் நிகழ்ந்த இரட்டைக் கோபுரத் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" இனை அறிவித்தது. தான் அழிக்க நினைத்த பயங்கரவாதஅமைப்புகளை "பூகோளப்பயங்கரவாத அமைப்புகள்" என்ற தரநிலைக்கு உள்ளாக்கியது. சந்தேகத்திற்கு இடமின்றி புலிகளும் அப்பட்டியலில் இணைக்கப்பட்டார்கள். (6) அமெரிக்கா தவிர்ந்த மேலும் 32 உலக நாடுகள் புலிகளைத் தடைப்பட்டியலுக்குள் இணைத்தார்கள்.

அதற்கு மிகமுக்கிய காரணம் ஸ்ரீலங்காவின் பூகோள அமைவிடச் சாபமும், இந்துமாகடலிற்குள் நுழைவதற்கான உரிமைப் போட்டியும் அப்போட்டிக்கு ஆதரவான ஸ்ரீலங்கா அரசும் அதனையொட்டித் தமது சுயநிர்ணய உரிமையைச் சமரசம் செய்ய முன்வராத ஈழத்தமிழினமும் தான்.

மேற்குலகிற்கும் - எஞ்சிய உலகிற்கும் பொது எதிரிகளான புலிகளும் தமிழர்களும், எதிரிக்கெதிரி நண்பன் என்ற கோட்பாட்டுக்கமைய இவ்விரண்டு உலக வல்லாதிக்க வகுதிகளினதும் பேராதரவுடன்இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இவ்வினப்படுகொலைப் போருக்கு நிதிதிரட்டிய கடன்களால் ஸ்ரீலங்கா பெரும் பொருளாதாரப் பேரழிவைச் சந்தித்தது. மேற்குலகாலும் எஞ்சிய உலகாலும் இலகுவாகக் கையாளப்படத்தக்க நிலையில் இன்று அதன் இறையாண்மை கேள்விக்குள்ளாகியுள்ளது.

ஆனால் தாம் சந்தித்த மாபெரும் இனப்படுகொலைக்குப் பின்னரும் ஈழத்தமிழ் மக்கள் தமது வேணவாவை மனோதிடத்துடன் வெளிப்படுத்தி, தமது தேசிய வாழ்வியலாக்கி, அடையாளத்தைப் பேணி தொலைநோக்கை அடைய முயற்சி செய்த வண்ணமே வாழ்கிறார்கள்.

இம்முயற்சியின் மிகப் பிந்திய வடிவங்களாக பன்னாடுகளில் உருவாக்கப்பட்ட, உருவாக்கப்பட்டுவரும் இனப்படுகொலைநினைவுச்சின்னங்களையும்,பன்னாட்டுத் தலைவர்கள் பலர் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளானார்கள் எனப் பொது அரங்குகளில் பேசிவருவதையும் உதாரணங்களாகக் கொள்ளலாம். இவை இரு உதாரணங்கள் மட்டுமே.

அடையாள அழிப்பின் முக்கிய கருவியாக தமிழினத்தைத் தோல்வியடைந்த மனநிலையில் பேணுவதுடன் எது அவர்களுடைய கூட்டு அடையாளத்தைக் காத்து நிற்கிறதோ அதனைப் பலவீனப்படுத்துவதும் இன்றியமையாததாகிறது. அதற்காகவே யதார்த்தம், அடையக்கூடியது, இதைவிட்டால் வேறில்லை என்ற மிக முக்கியமான வாதங்களுடன் தலைவரின் இன்மை என்பதும் அவரால் பதியமிடப்பட்ட தொலைநோக்கு தவறென்பதும் பேசப்படுகின்றன.




இவ்வாதங்கள் மிகமுக்கியமாக தமிழினத்தின் இரத்தத்தில் சுவறிப்போயுள்ள போராட்டக் குணத்தையோ ஈழத்தமிழர்கள் காலனித்துவத்திற்கு முன்பாக தனியாட்சியைக் கொண்டிருந்தார்கள் என்பதையோ கருத்திற் கொள்ளவில்லை.

மேலும் வேறுஎந்த விடுதலைப் போராட்டத்துடன் ஒப்பிட முடியாத உன்னத வேறுபாடாக பூகோள அமைவிடச் சாபத்தினைத் தன்னகத்தே கொண்டுள்ள விடுதலைப் போராட்டமான ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக் கான போராட்டம் அவர்களின் தேசிய வாழ்வியலில் – தேசமாக வாழ்வதில்இன்றும் நிலைகொண்டுள்ளதையும் அவர்கள் முக்கியத்துவப் படுத்தாமல் தவிர்க்க முயல்கிறார்கள்.

ஈழத்தமிழர்களின் தேசிய வாழ்வியலைப் புதுக்கிய தலைமையின் இன்மை இன்னும் உணரப்படவில்லை, இன்மை எந்தவிதமான தாக்கத்தையும் செலுத்தவில்லை என்பது மட்டுமல்ல அதன் நிலைபேறும் உறுதியாகவே உள்ளது என்பது உண்மை.

தமிழினக் கூட்டு வாழ்வியலைஉடைத்தழிப்பதற்கு நிகழும் பல முயற்சிகளை கடந்த 17 வருடங்களாக ஈழத்தமிழர்கள் தோற்கடித்தே வருகின்றார்கள். ஏனெனில் "நாம் இருப்பதால் தான் நான் இருக்கிறேன்" என்கிறார் அவர்களின் தலைவர்.

**அடிக்குறிப்பு**

1.The Upper Echelons Theory -Donald Hambrick
2. Puppet, Puppeteer and Pray - Dr. Darini Rajasingham Senanayake
3. US-Iran Conflict Escalation in the Indian Ocean: Implications for Sri Lanka's Foreign Policy - Chulanee Attanayake and Rajni Gamage
4. More On The LTTE Attack On US-Charted MV CORDIALITY - A New LTTE Tactick?, Cable: 97COLOMBO3548_a
5. Foreign Terrorist Organizations, U.S. Government, Office of Counterterrorism. 11 October 2005
6. Executive Order 13224, US Department of State.





வடகிழக்கு மாகாணமானது பல்வேறு இழப்புகளையும் காலத்திற்கு காலம் எதிர்கொண்டதுடன் அதன் வலிகளையும் வேதனைகளையும் காலத்திற்கு காலம் சுமந்த நிலையிலேயே சென்றுகொண்டிருக்கின்றது. தமிழினத்தின் விடுதலைப்போராட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் இழப்புகள் என்பது மிகவும் பாரியதாக இருந்திருக்கின்றது.



வடகிழக்கில் ஆயுதப்போராட்டம் உச்சம்பெற ஆரம்பித்த 1990ஆம் ஆண்டு காலப்பகுதி என்பது கிழக்கு மாகாண தமிழர்களின் கறுப்பு வருடமாக இருந்துள்ளது.ஆயிரம் ஆயிரம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட ஆண்டாக இந்த ஆண்டு இருக்கின்றது.அதிலும் 1990ஆம் ஆண்டின் ஜுன் தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் கிழக்கில் தமிழினத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட படுகொலைகள் வரலாற்றில் மறக்கப்படமுடியாத ஒரு சம்பவமாகவே இருந்துவருகின்றது.

கிழக்கில் தமிழர்களை கருவறுப்பு செய்யவதற்காக 1956ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு படுகொலைகள் அரங்கேற்றப்பட்டதுடன் இனச்சுத்திகரிப்பும் பல்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டது.கல்லோயா குடியேற்றத் திட்டம் தொடக்கம் கிழக்கில் தமிழ் -முஸ்லிம் கலவரம் வரையில் பல்வேறு வகையான கருவறுப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் தமிழர்கள் தமது இருப்பினையும் தமிழ் தேசியத்தினையும் பாதுகாக்கும் வகையில் காலத்திற்கு காலம் தமது செயற்பாடுகளை முன்னெடுத்தேவருகின்றனர்.




1950-களிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா போன்ற பாரிய குடியேற்றத் திட்டங்கள் மூலம், அதுவரை தமிழ்ப்பேசும்மக்கள்பெரும்பான்மையாகவாழ்ந்தஅம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் பெருமளவிலான பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்பட்டனர்.இக்குடியேற்றங்களைத் தொடர்ந்து, புதிய தேர்தல் தொகுதிகளும், நிர்வாகப் பிரிவுகளும் (பிரதேச செயலகங்கள்) உருவாக்கப்பட்டன. இதன் விளைவாக, தமிழர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் திட்டமிட்டபடி பலவீனப்படுத்தப்பட்டது.

இலங்கையின் தாயகப் பரப்பில் கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை) தொன்மைக்காலம் தொட்டே தமிழ் பேசும் மக்களின் முதன்மைப் பொருளாதார மற்றும் கலாசார மையமாக விளங்கி வருகிறது. எனினும், 1956ஆம் ஆண்டின் 'சிங்களம் மட்டும்' சட்டத்தின் அறிமுகத்திற்குப் பின்னரான இனவாதக் கலவரங்கள் தொடங்கி, மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போர் வரை, கிழக்குத் தமிழர்கள் மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்களையும், திட்டமிட்ட படுகொலைகளையும் எதிர்கொண்டனர். இப்பகுதியின் புவியியல் அமைவிடமும், பல்லினத் தன்மையும் இப்பகுதியை போர்க்காலத்தில் கடுமையான வன்முறைக் களமாக மாற்றின.



### 1. கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் (1987 மற்றும் 1991)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் இருமுறை மிக மோசமான படுகொலைகளைச் சந்தித்தன.



1987இல் இராணுவ இறால் பண்ணை ஒன்றில் பணியாற்றிய தொழிலாளர்கள் உட்பட 80க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். 1991 இல் ஜூன் 12 அன்று நிகழ்த்தப்பட்ட இத்தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 152 தமிழ் பொதுமக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

### 2. கிழக்குப் பல்கலைக்கழக (வந்தாறுமூலை) படுகொலைகள் (1990)

1990 ஜூன் மாதத்தில் போர் மீண்டும் தீவிரமடைந்தபோது, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் புகலிடம் தேடி வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.செப்டம்பர் 5, 1990 அன்று, பல்கலைக்கழக அகதி முகாமில் இருந்த 158 தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டு, பின்னர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இன்றுவரை கருதப்படுகின்றனர்.

மட்டு.நகரான்

### 3. சத்துருக்கொண்டான் படுகொலை (1990)

1990 செப்டம்பர் 9 அன்று மட்டக்களப்பின் சத்துருக் கொண்டான், பிள்ளையாரடி போன்ற கிராமங்களில் இருந்து குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 184 பொதுமக்கள் இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 5 வயதிற்குட்பட்ட பல குழந்தைகளும் அடங்குவர்.



### 4. கல்முனை மற்றும் தம்பிலுவில் படுகொலைகள் (1985 ஃ 1990)

அம்பாறை வீரமுனை மற்றும் தம்பிலுவில் (1985): இப் பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படையினரால் (STF) பல இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டு, பாரிய புதைகுழிகளில் புதைக்கப்பட்டதாக மனித உரிமை அமைப்புகள் ஆவணப் படுத்தியுள்ளன.



1990 ஜூன் மாதத்தில் கல்முனைப் பகுதியில் நூற்றுக்கணக்கான தமிழ் பொதுமக்கள் வீதிகளிலும், கடற்கரையோரங்களிலும் வைத்துப் படுகொலை செய்யப் பட்டனர். யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமை அமைப்புஇதன் போதான இழப்புகளை 160 முதல் 250 வரை எனப் பதிவு செய்துள்ளது. 1990களில் வீரமுனை படுகொலை,திராய்கேணி படுகொலை,உடும்பன்குளம் படுகொலை என படுகொலைகள் நீண்டுகொண்டுசென்றன.

### 5. திருகோணமலை படுகொலைகள்

திருகோணமலை மாவட்டத்தின் குமரபுரம், மூதூர் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் அவ்வப்போது திட்டமிட்ட படுகொலைகளும், வான்வழித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. குறிப்பாக, அகதி முகாம்கள் மற்றும் மீன்பிடித் கிராமங்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பலியாகினர்.

இந்த படுகொலைகள் என்பது வெறுமனே ஒரு

தொடர்ச்சி: பக்கம் 14




இலங்கையின் பொருளாதார வரலாற்றை தேயிலைத் தொழிலைத்தவிர்த்து எழுத முடியாது.உலகப்புகழ்பெற்ற “சிலோன் டி” இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் முக்கிய ஏற்றுமதி உற்பத்திகளில் ஒன்றாகும். ஆனால், இந்தத் தொழில்துறையின் பிரகாசமான வெளிப்புறத்தின் பின்னால் பல தலைமுறைகளாக உழைத்து வரும் தொழிலாளர்களின் வாழ்க்கை இன்னும் வறுமை, சமத்து வமின்மை, சமூகப் புறக்கணிப்பு மற்றும் உரிமை மறுப்புகளால் நிரம்பியிருக்கிறது.

## What’s the problem?

Since their arrival in the early 19th century, Malaiyaha Tamils have been one of the most discriminated communities in Sri Lanka. Largely relegated to invisible work in tea plantations, the community has endured two centuries of systemic and structural exclusion, despite tea exports being the country’s second largest export revenue.

In the southern private tea estates, workers are trapped in a system that may amount to debt bondage, where low wages force them to live in squalor in employer-controlled housing and take on debt for their daily essentials. All the while, their movements are controlled, their complaints unheard and their voices silenced.

On paper, Sri Lanka has labour laws and constitutional protections for workers. But Malaiyaha Tamils are not able to access these protections despite living in a system where debt and abuse become control, and employers operate with impunity. It’s time to end this injustice!

குறிப்பாக மலையகத் தமிழ் சமூகத்தின் வரலாறு இலங்கையின் தேயிலைத் தொழிலுடன் பிரிக்க முடியாத வகையில் இணைந்துள்ளது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்போது இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் தொழிலாளர்களின் உழைப்பின் மீதே இலங்கையின் தோட்டப் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டது. அவர்கள் உருவாக்கிய செல்வத்தின் பயன்களை நாடு அனுபவித்தபோதும், அந்த சமூகத்தின் பெரும்பகுதி இன்னமும் அடிப்படை மனித உரிமைகள், சமமான ஊதியம் மற்றும் கண்ணியமான வாழ்க்கை ஆகியவற்றிற்காகப் போராடிக் கொண்டிருக்கிறது.



சமீபத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட ஆய்வறிக்கை, குறிப்பாக தென் மாகாணத்தில் உள்ள தனியார் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் நிலை குறித்து கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளது. அந்த அறிக்கை சுட்டிக்காட்டும் விடயங்கள் வெறும் தொழிலாளர் சுரண்டலை மட்டுமல்லாது இன அடிப்படையிலான பாகுபாடு மற்றும் அமைப்புசார் அநீதிகளைப் பற்றியும் பேசுகின்றன.

### மலையகத் தமிழர்களின் வரலாற்றுப் பின்னணி

மலையகத் தமிழ் சமூகத்தின் வரலாறு இலங்கையின் காலனித்துவ பொருளாதார வரலாற்றுடன் நேரடியாகப் பிணைந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர்கள் இலங்கையில் கோப்பி மற்றும் பின்னர் தேயிலைத் தோட்டங்களை விரிவுபடுத்தியபோது, உள்ளூர் தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க தென்னிந்தியாவில் இருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை அழைத்து வந்தனர்.



இந்தத் தொழிலாளர்கள் மிகக் கடினமான சூழல்களில் வாழவும் உழைக்கவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். குறைந்த ஊதியம், தரமற்ற குடியிருப்புகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகளின் பற்றாக்குறை ஆகியவை அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தன. சுதந்திரத்திற்குப் பிறகும் இந்த நிலைமைகள் முழுமையாக மாறவில்லை. பல தசாப்தங்களாக குடியுரிமை பிரச்சினைகள், அரசியல் பிரதிநிதித்துவக் குறைபாடுகள் மற்றும் பொருளாதார பின்தங்கிய நிலை ஆகியவற்றை எதிர்கொண்ட மலையகத் தமிழர்கள், இலங்கையின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர் சமூகங்களில் ஒன்றாகவே தொடர்ந்தனர்.

பொதுவாக தேயிலைத் தோட்டங்கள் என்றால் மத்திய மாகாணம், நுவரெலியா, பதுளை, கண்டி போன்ற பகுதிகள் நினைவுக்கு வரும். ஆனால் தென் மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் கணிசமான அளவில் தேயிலை உற்பத்தி நடைபெறுகிறது. இந்தப் பகுதிகளில் பெரிய நிறுவனங்களின் கீழ் இயங்கும் தோட்டங்களுடன் சேர்த்து, தனியார் மற்றும் சிறு அளவிலான தோட்டங்களும் அதிகமாக உள்ளன. இவை பல நேரங்களில் தேசிய அளவிலான கவனத்திற்கு வராமல் போகின்றன.

இதன் விளைவாக, தொழிலாளர் உரிமைகள் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?, குறைந்தபட்ச ஊதியச் சட்டங்கள் பின்பற்றப்படுகிறதா?, தொழிலாளர்கள் பாதுகாப்பான சூழலில் வேலை செய்கிறார்களா? என்ற கேள்விகள் போதுமான அளவில் கண்காணிக்கப்படுவதில்லை. சர்வதேச மன்னிப்புச் சபையின் அண்மைய ஆய்வில் தென் மாகாணத்தின் பல தனியார் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டன. இதன்படி, தொழிலாளர்கள் பலர் சட்டரீதியான பாதுகாப்புகளுக்கு வெளியே உள்ள வேலை ஏற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. வேலை இலக்குகளை அடையத் தவறினால் சம்பளக் குறைப்பு

மருதன் ராம்

செய்யப்பட்டதாக அங்குள்ள தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். தொழிலாளர்களின் சமூக மற்றும் பொருளாதார பலவீனங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் அறிக்கை கூறுகிறது. சில இடங்களில் தொழிலாளர்கள் வேலையை விட்டு வெளியேற முடியாத அளவுக்கு பொருளாதாரத்தின் சார்பில் வைத்திருக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்தக் தகவல்கள் இலங்கையின் தொழிலாளர் பாதுகாப்பு அமைப்புகள் குறித்து ஆழமான கேள்விகளை எழுப்புகின்றன. அறிக்கையைத் தொடர்ந்து பரவலாக விவாதிக்கப்பட்ட முக்கிய விடயங்களில் ஒன்று சம்பள வேறுபாடு. சில தொழிலாளர்கள் வழங்கிய சாட்சியங்களின்படி, மலையகத் தமிழ் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,000 முதல் 1,100 ரூபாய் வரையிலான ஊதியம் மட்டுமே வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அதேநேரத்தில், சில சிங்கள தொழிலாளர்களுக்கு அதிக ஊதியமும் கூடுதல் சலுகைகளும் வழங்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. குறிப்பாக 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் தினசரி சம்பளம் 1,750 ரூபாவாக உயர்த்தப்பட்டது. இதில் 1,550 ரூபா அடிப்படை வேதனமாகவும், 200 ரூபா அரசாங்கத்தின் நாளாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவாகவும் அறிவிக்கப்பட்டது.

இருப்பினும், இந்த 200 ரூபா அரசாங்க நிதியுதவி மற்றும் மொத்த வேதன உயர்வுத் திட்டம் என்பன பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் உள்ள தோட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும். தென் மாகாணத்தில் உள்ள தனியார் தோட்டங்கள் மற்றும் சிறு தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இந்த உயர்வு சட்டப்பூர்வமாகப் பொருந்தாது என்பதால், அவர்கள் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட 1,350 ரூபா என்ற குறைந்தபட்ச வேதனத்திற்கே உரித்துடையவர்களாக உள்ளனர். சர்வதேச மன்னிப்புச் சபையின் அண்மைய ஆய்வின்படி, தென் மாகாணத் தனியார் தோட்டங்களில் ஒரே பணியைச் செய்யும் தொழிலாளர்களிடையே இன அடிப்படையில் வேதனப் பாரபட்சம் நிலவுகிறது.




அங்குள்ள மலையகத் தமிழ் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 1,000 முதல் 1,100 ரூபா மட்டுமே வேதனமாக வழங்கப்படுகிறது. அதேதோட்டங்களில் பணிபுரியும் சிங்களத் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 2,000 ரூபா வரை வேதனமும், மேலதிகமாகத் தேநீர் மற்றும் உணவு வசதிகளும் வழங்கப்படுகின்றன. சிங்களத் தொழிலாளர்களுக்குச் சொந்த வீடுகள் இருப்பதால், அவர்கள் வேலையை விட்டுச் சென்றுவிடுவார்கள் என்ற பயம் நிர்வாகத்திற்கு உள்ளது. ஆனால், தோட்ட இருப்பிடங்களிலேயே தங்கியிருக்கும் தமிழ் தொழிலாளர்கள் எங்கும் செல்ல முடியாது என்ற பலவீனத்தை கொண்டு மலையகத் தமிழ் தொழிலாளர்கள்

தொடர்ச்சி: பக்கம் 16




ஊடகவியலாளர் **கார்த்திக்**

திராவிட அரசியலின் கோட்டையாக இருந்த தமிழ்நாட்டை மே-4-ம் தேதி விஜய் என்ற புயல் புரட்டிப்போட்டது. அந்தப் புயலில் திமுக, அதிமுக என்ற பெருங்கட்சிகள் சிதறிப் போயின. இரண்டு பெரும் கட்சிகளும் தங்களுடைய எதிர்காலம் என்ன என்று தேடிக் கொண்டிருக்கும் வேளையில் தமிழ்நாட்டின் அரசியல் களம் முற்றாக மாறியிருக்கிறது. அதில், தங்களது இடம் எதுவென்ற குழப்பத்தில் திமுகவும் அதிமுகவும் தள்ளாடிக் கொண்டிருக்கையில் தமிழக வெற்றிக் கழகம் முதல் பெரும்கட்சி என்ற சாதனையுடன் அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறார் விஜய்.



ஐம்பது ஆண்டுகளாக தமிழ்நாடு அதிமுக, திமுக என்ற இருதுருவ அரசியலில் மையம் கொண்டிருந்தது. அந்த இருதுருவ அரசியலை விஜயகாந்தாலோ, கமல்ஹா சனாலோ, சீமானாலோ, தேசியக் கட்சிகளாலோ அசைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. இந்தச் சூழலில்தான் கட்சித் தொடங்கிய இரண்டே ஆண்டுகளில் இரண்டு பெரும் கட்சிகளையும் துவம்சம் செய்தார் விஜய். இப்போது, இரண்டு கட்சிகளும் தங்களுக்கான எதிர்காலம் தெரியாமல் இருக் கின்றன.

## எதிர்காலம் இல்லாமல் கரையும் அதிமுக

2016-ம் ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு பல்வேறு சவால் களுக்குப் பிறகு, அதிமுக எடப்பாடியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பல சவால்களை மீறி அதிமுகவை தனது கட்டுப்பாட்டுக்குள் எடப்பாடியால் கொண்டுவர முடிந்தாலும், கட்சியை வெற்றிப் பாதைக்கு அவரால் அழைத்துச் செல்ல முடியவில்லை. மு.க.ஸ்டாலினிடம் தொடர் தோல்விகளைச் சந்தித்துவந்தார். நான்கு ஆண்டுகள் நிலையான ஆட்சி மேற்கொண்டாலும், ஜெயலலிதாவின் ஆளுமையை எடப் பாடியால் கொண்டுவரமுடியவில்லை.





அதனால், பத்து தோல்வி பழனிசாமி, பாஜக அடிமை என எதிர்தரப்பு முத்திரை குத்துவதை வாங்க வேண்டியிருந்தது. உட்கட்சியிலும் தொடர் குழப்பங்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இந்த தேர்தலிலும் அதிமுக தோற்றால், கட்சி இரண்டாக உடையும் என எதிர் பார்க்கப்பட்டது. அதைப்போலவே தேர்தல் தோல்விப் பிறகு அதிமுகவிலிருந்து சாரை சாரையாய் முன்னாள் அமைச்சர்கள், நிர்வாகிகள் புறப்பட்டு பனையூர் வாசலில் காத்துக்கிடக்கின்றனர். அதிமுக திரும்ப ஆட்சிக்கு வரவாய்ப்பே இல்லை என்ற சூழல் கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது அல்லது எடப்பாடி பழனிசாமி தலைமைப் பொறுப்பில் இருக்கும் வரை அதிமுக மீண்டு வர வாய்ப்பில்லை என்று உறுதியாகிவிட்டது. தேர்தல் பிரச் சாரத்தின்போதே மற்றும் பலர் என்று விஜய் பேசியது இன்று நிஜமாகியுள்ளது. ஒரு நடிகரால் தொடங்கப்பட்ட கட்சிக்கு இன்னொரு நடிகரால் முடிவுரை எழுதப்பட்டது.

## கூட்டணி இழந்து தனித்து நிற்கும் திமுக.

தொடக்ககாலம் தொட்டே திமுகவின் பலம் கூட்டணி கட்சிகள்தான். 1967-ம் ஆண்டு திமுக ஆட்சியைப் பிடித்த போதே கொள்கையளவில் எதிர்தரப்பில் இருக்கும் ராஜாஜி போன்றவர்களுடன் வானவில் கூட்டணி அமைத்துதான் பேரறிஞர் அண்ணா ஆட்சியைப் பிடித்தார். அண்ணாவாக இருந்தாலும் சரி, கலைஞர் கருணாநிதியாக இருந்தாலும் சரி, மு.க.ஸ்டாலினாக இருந்தாலும் சரி கூட்டணி அரவ ணைப்பதில் கெட்டிக்காரர்களாவே இருந்தார்கள். அதுதான் அவர்களுக்கு வெற்றியையும் தேடித்தந்துள்ளது. திமுக தன்னுடைய பெரும்பான்மையாக காலங்களில் இடதுசாரி தன்மை கொண்ட கட்சிகளுடன் கூட்டணி மேற்கொண்டு, ஒரு முற்போக்கு அடையாளத்தை தக்கவைத்துக்கொள்ளும்.



ஆளும் கட்சியாக இருந்தால் கூட்டணிகட்சிகளை சமாளித்து ஆட்சி நடத்துவது, எதிர்கட்சியாக இருந்தால் கூட் டணி கட்சிகளுடன் இணைந்து போராட்டம் நடத்துவது என்று திமுக கூட்டணியாகவே செயல்படும். கூட்டணி கட்சியாக இருக்கும்போது ஆளும்கட்சிக்கு எதிராக பெரும் போராட்டங்களை முன்னெடுக்க கூட்டணி கட்சிகள் திமுகவுக்கு உதவியாக இருக்கும். இந்தச் சூழலில்தான் விஜய், திமுகவின் நம்பகமான கொள்கை கூட்டணி கட்சி களை லாவகமாக தன்பக்கம் இழுத்துள்ளார். அதிலும், அமைச்சர் பதவி கொடுத்து அவர்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார். அதன்மூலம் திமுக தனித்து விடப்பட்டுள்ளது.



திமுக- அதிமுக இருகட்சிகளும் அஸ்திவாரம் உடைந்து அல்லாடிக் கொண்டிருக்கின்றன. மறுபுறம் தவெக வலுவான ஒரு கட்சியாக உள்ளது. திமுக, அதிமுக இரு கட்சிகளும் விஜய்க்கு எதிராக எப்படி எதிர்கட்சி அரசியலை முன்னெடுப்பது என்ற குழப்பத்தில் இருக்கின்றன. விஜய் யின் தவறை மக்களிடம் கொண்டு சென்றாலும் அவர்கள் நம்பத் தயாராக உள்ளனரா என்பது தெரியவில்லை.

திமுக, அதிமுக சேர்ந்து விஜய்க்கு எதிராக வியூகம் அமைக்கலாமா? அப்படி அமைத்தால் அது மக்களிடம் எடுபடுமா? தனித்து நின்றால் அது மீண்டும் விஜய்க்கே சாதகமாகுமா என்று பல குழப்பங்களில் இந்தக் கட்சிகள் உள்ளன. மாறாக விஜய், தனக்கென்று ஒரு வலுவான கூட்டணியையும் உருவாக்கிவிட்டார், மதச்சார்பற்ற சமூக நிதி என்ற அடையாளத்தையும் திமுகவிடமிருந்து உருவிக் கொண்டார்.

தமிழ்நாட்டின் அரசியல் களம் திமுக அதிமுக இல்லை. தவெக யார் என்பதுதான் கேள்வி.. இப்போதும் ஒரு வகையில் திமுக, அதிமுகவுக்குதான் போட்டி. ஆனால் இரண்டாம் இடத்துக்கு. முதல் இடம் விஜய்க்காக ஒதுக் கப்பட்டு விட்டது. விஜய்யிடமிருந்து முதல் இடத்தை பிடு ங்குவது அத்தனை எளிதல்ல. விஜய்யின் வசீகரத்தை மீறி கொள்கை, வியூகம் வகுத்து ஆட்சியைப் பிடிப்பது எளிதல்ல. அப்படி விஜய்யை வீழ்த்த வேண்டுமென்றால் அது திமுகவால் சாத்தியம். அதிமுகவுக்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் திமுக பலமுறை தோல்வியிலிருந்து மீண்டும் வந்துள்ளது.


• • •




# இஸ்ரேல் சந்தித்த மூலோபாயத் தோல்வி

வேல்ஸில் இருந்து **அருஸ்**

அமெரிக்க - ஈரான் போரின் முடிவுவாக இடைக்கால உடன்பாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும், ஈரனின் அதிபர் மசூட் பெஸஸ்கியானும் கடந்த புதன்கிழமை(17) கையெழுத்திட்டனர். 60 நாட்கள் இடைக்கால போர் நிறுத்தம் நடைமுறையில் இருக்கும், அமெரிக்க கடற்படை முற்றுகை நீக்கப்படும். ஈரான் ஹார்மூஸ் நீரிணையை 60 நாட்களுக்கு கட்டணங்கள் இன்றி திறக்கும். உலகின் பொருளாதாரம் மூச்சுவிட இது ஒரு கால அவகாசத்தை வழங்கும்.



அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போர் அந்த பிராந்தியத்தின் அதிகாரச் சமநிலையை மாற்றியமைத்துள்ளதுடன், இந்த போரில் ஈரானே வெற்றிபெற்றதாக பல ஆய்வாளர்களும் தெரிவித்துவரும் நிலையில் விக்கிபீடியாவும் அதனை தான் பதிவு செய்துள்ளது. பெரும் அழிவுகளுக்கும் இராஜதந்திர நாடகங்களுக்கும் பிறகு, கிட்டத்தட்ட எதையும் மாற்றாத பெரும் வல்லரசுகளுக்கு இடையிலான ஆயுத மோதலின் ஒரு அரிய உதாரணமாக அது அமைந்துள்ளது.

டெஹ்ரானும் வாஷிங்டனும், தத்தமது பாணியில், ஹோர்முஸ் நீரிணையின் மீதான முற்றுகையை நீக்குவதாக அறிவித்தவுடன், நிலைமை போருக்கு முன்பு இருந்த நிலைக்குத் திரும்பியது. இரண்டு மாத கால பேச்சுவார்த்தைகளின் போது விவாதிக்கப்பட்ட மற்ற அனைத்து முக்கிய விஷயங்களிலும், இரு தரப்பினரும் பிப்ரவரி 28-க்கு முன்பு இருந்த அதே நிலைக்கு ஏறக்குறைய வந்துள்ளனர்.



இன்னும் கூறப்போனால் ஈரான் பெரும் அழிவைச் சந்தித்தாலும் போர் தொடங்க முன்னர் இருந்த நிலையை விட அதிகாரச் சமநிலையில் மிகப்பெரும் பாய்ச்சலைக் கண்டுள்ளது.அதுதான் குறிப்பிடத்தக்க விஷயம். இந்த மோதலில் ஈடுபட்ட தரப்புகளில் ஒன்று,இராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் உலகின் மிகவும் சக்திவாய்ந்த நாடாக இருந்தது. ஈரான் மீதான தாக்குதல், அமெரிக்காவின் சக்தியை வெளிப்படுத்தும் ஒரு வலிமையான செயல் விளக்கமான நோக்கத்தை கொண்டிருந்தது, ஆனால் அதற்குப் பதிலாக, அந்த சக்தியின் வரம்புகளை உலக நாடுகள் காண அது வழிவகுத்தது.

போருக்கான பெரும் செலவினம், கிட்டத்தட்ட 115 பில்லியன் டொலர்கள், இராணுவ உள்கட்டமைப்பைத் திரட்டுதல், மற்றும் குடிமைத்துறையின் கணிசமான பகுதியை மூலோபாய இலக்குகளுக்குக் கீழ்ப்படுத்துதல் ஆகியவை, வாஷிங்டன் எதிர்பார்த்ததை விட மிகவும் குறைவான தாக்கத்தையே விளைவித்தன. அமெரிக்காவிடம், தேவையான ஆயுதங்கள் மற்றும் பணம் இருந்த போதிலும், தடுத்து நிறுத்த முடியாத ஒரு மேலாதிக்க சக்தியைப் போலத் தோன்றாமல், ஒரு காகிதப் புலியைப் போலவே காட்சியளித்தது; அமெரிக்கா பலவீனமான நாடுகளுக்கு ஆபத்தானதாகவும், ஆனால் எதிர்க்கத் தயாரான நாடுகளுக்கு எதிரான போரில் பலவீனமாகவும் இருந்தது.

**2026 Iran war**

Part of the Iran–Israel conflict and the Middle Eastern crisis




Locations struck by:
- United States and Israel
- Iran, Hezbollah, Houthis, and PMF

V · T · E

| | |
|---|---|
| **Date** | 28 February 2026 – 17 June 2026[18] (3 months and 3 weeks) |
| **Location** | West Asia[n] · Indian Ocean[o] |
| **Result** | Iranian victory[disputed – discuss][20] |

- Islamabad Memorandum
- Regime change failure
- Strait of Hormuz crisis
- Escalation of the Israel–Hezbollah conflict
- Global economic disruption and fuel crisis

**Belligerents**

| | |
|---|---|
| United States<br>Israel<br>Saudi Arabia[a]<br>United Arab Emirates[b]<br>Kuwait[c] | Iran<br>Axis of Resistance<br>Hezbollah[d]<br>Houthis[e]<br>Amal Movement[f]<br>Popular Mobilization Forces[g]<br>Islamic Resistance in Iraq[g] |

ஒருநாள் அமெரிக்க அழுத்தத்தை எதிர்கொள்ளக்கூடிய அரசாங்கங்கள் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ளாமல் இருக்க மாட்டார்கள். இப்போது அவர்கள் முன் இரண்டு உதாரணங்கள் உள்ளன: வெனிசுலா செய்தது போல எப்படி நடந்துகொள்ளக் கூடாது என்பதும், ஈரான் செய்தது போல எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதும். அமெரிக்க மற்றும் இஸ்ரேலியத் தாக்குதலின் உடனடி நோக்கம் மிகவும் தெளிவாக இருந்தது. அது ஈரானில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவருவது அல்லது சர்வதேச விவகாரங்களில் இஸ்லாமியக் குடியரசை ஒரு ஒருங்கிணைந்த பங்கேற்பாளராக இல்லாமல்அழிப்பது என்பதாக இருந்தது. இதில், ஆக்கிரமிப்பாளர்கள் படுதோல்வி அடைந்தனர், இப்போது நாம் தோல்வியை வெற்றியாகக் காட்ட அவர்கள் கூறும்சாக்குப்போக்குகளையும் முயற்சிகளையும் கேட்கிறோம், ஆனால் மைய உண்மை அப்படியே உள்ளது.




இந்தப் போர் ஒரு முழு அளவிலான தரை, கடல் மற்றும் வான்வழிப் போர்த் தாக்குதலாக அமையவில்லை என்பது ஒரு பொருட்டல்ல. 2003-ல் ஈராக்கிற்கு எதிராகப் பயன்படுத்திய வளங்களைப் போன்றவற்றை 2026-ல் அமெரிக்கர்கள் ஈரானுக்கு எதிராகப் பயன்படுத்தவில்லை என்றால், அவர்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை என்பதே அதன் பொருள். அதற்கான காரணங்கள் இரண்டாம் பட்சமானவை; அவை உள்நாட்டு அரசியல், சர்வதேசக் கட்டுப்பாடுகள், பொருளாதார வரம்புகள் அல்லது ஆயுதப் படைகளின் பொருள்சார் நிலை ஆகியவையாகஇருக்கலாம், ஆனால் விளைவு ஒன்றுதான். வாஷிங்டன் தனது முழு பலத்தையும் கட்டவிழ்த்துவிடவில்லை, இழப்புகளைச் சந்தித்தது, மேலும் தனது முக்கிய நோக்கத்தை அடைவதில் தோல்வியடைந்தது.




இதற்கு மாறாக, ஈரான் எந்தவொரு குறிப்பிட்ட ஆயுத அமைப்பையும் விட மிக முக்கியமான ஒன்றை வெளிப்படுத்தியது. உக்ரைனைப் போல, அது வெளிநாடுகளிலிருந்து பெரிய அளவிலான இராணுவ உதவியைப் பெறவில்லை, ஆயினும், தெளிவான ஒரு தேச அடையாள உணர்வால் பிணைக்கப்பட்ட ஒரு மக்கள் மற்றும் ஆளும் வர்க்கத்தின் மீள்திறனை அது காட்டியது. இந்த அடையாளம் வெறும் நிறுவனங்களை மட்டும் சார்ந்திருக்கவில்லை, மாறாக உலகில் நாட்டின் இடம் குறித்த தார்மீக மற்றும் தத்துவார்த்தக் கருத்துக்களைச் சார்ந்துள்ளது.

அமெரிக்க வரலாற்றாசிரியர் எட்வர்ட் லுட்வாக் ஒருமுறை குறிப்பிட்டது போல, ஆயுதங்களின் அளவு அல்லது நுட்பத்தை விட இந்தக் குணம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கக்கூடும். இந்த விஷயத்தில், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப மேலாதிக்கம் அரசியல் வெற்றியாக மாறாததால், இது தீர்க்கமானதாக அமைந்தது.

ஈரான் தாக்குதல்களைத் தாங்கி தப்பிப்பிழைத்து,

**தொடர்ச்சி: பக்கம் 14**



# போரில் அமெரிக்காவின் தோல்வி உலக நெருக்கடியின் முடிவல்ல

தமிழில்: **ஆர்த்தீகன்**

ஓராண்டில் எவ்வளவு பெரிய மாற்றம்! கடந்த ஜூன் மாதம், ஈரான் மீதான முதல் இஸ்ரேல்-அமெரிக்க கூட்டுத் தாக்குதலைத் தொடர்ந்து, மத்திய கிழக்கில் ஒரு நகைச்சுவை பரவலாகப் பேசப்பட்டது. அது, ஒரு மதுக் கடைக்காரர் தனது மதுக்கடைக்குள் ஒரு அமெரிக்கர், ஒரு இஸ்ரேலியர் மற்றும் ஒரு ஈரானியரை வரவேற்று, அவர்களுக்கு பீர் கொடுத்து, “வாழ்த்துக்கள், கனவான்களே; நீங்கள் அனைவரும் வென்றுவிட்டீர்கள்” என்று கூறியதை விவரித்த நகைச்சுவை. ஆனால் இந்த முறை அப்படி இல்லை. ஈரானுக்கு எதிரான இரண்டாவது போரில் ஒரே ஒரு வெற்றியாளர் மட்டுமே உள்ளார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை: அது ஈரான். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உட்பட பல தோல்வியாளர்களும் உள்ளனர்.




தவறாக எண்ண வேண்டாம். ஒரு போர் நிறுத்தம் என்பது அமைதிக்குச் சமமானதல்ல. முக்கியப் பிரச்சினைகள் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்காக விடப்பட்டுள்ளன, மேலும் அவை பலனளிக்கும் என்பதற்கோ அல்லது ஏதேனும் ஒப்பந்தங்கள் நீடிக்கும் என்பதற்கோ எந்த உறுதியும் இல்லை. நாம் இப்போது இங்கு எதிர்கொள்வது மற்றொரு மத்திய கிழக்கு மோதல் மட்டுமல்ல. மாறாக, இது ஒரு தொடர்ச்சியான போராட்டத்தின் ஒரு பகுதியாகும், இதில் உலக மேலாதிக்க சக்தி, உலக ஒழுங்கை மாற்றியமைக்கும் போக்குகளைத் தலைகீழாக மாற்ற முயல்கிறது. மத்திய கிழக்கு, ஒரு உலகப் போருக்கு நிகரான ஒரு களமாக விளங்குகிறது. அதனுடன், மேற்கு நாடுகள் ரஷ்யாவைத் தோற்கடிக்க முயலும் கிழக்கு ஐரோப்பாவும், அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் சீனாவைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் கிழக்கு ஆசியாவும் உள்ளன.



இந்தப் போராட்டம் தொடரும். ஒரு புதிய சமநிலை எட்டுவதற்கு வெகு தொலைவில் உள்ளது, மேலும் வரும் காலங்களில் புதிய போர்கள் தவிர்க்க முடியாதவை. இருப்பினும், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே ஒரு தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டால்கூட, அதன் விளைவுகள் பிரம்மாண்டமானவையாகவும் தொலைநோக்குடையவையாகவும் இருக்கும்.




எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தப் போரிலிருந்து ஈரான் ஒரு வலிமையான பிராந்திய சக்தியாக உருவெடுத்துள்ளது. அதை நசுக்க முடியாத வாஷிங்டன், ஒரு தற்காலிக நிவாரணத்தை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது, ஈரானின் மேம்பட்ட நிலையை மட்டுமே உறுதிப்படுத்துகிறது. மேலும், தெஹ்ரானில் ஆட்சி மாற்றம் குறித்தோ, அதன் பாலிஸ்டிக் ஏவுகணைக் கிடங்குகளுக்கு ஏதேனும் வரம்புகள் விதிப்பது குறித்தோ, அல்லது அந்நாட்டின் அணுசக்தித் திட்டத்தை ஒழிப்பது குறித்தோ இனி எந்தப் பேச்சும் இல்லை; ஈரானின் பிராந்திய கூட்டாளிகளைக் கைவிடுவதைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. இவை அனைத்தும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் உண்மையான இலக்குகளாக இருந்தன, மேலும் அந்த அனைத்து முனைகளிலும், தாக்குதல் நடத்தியவர்கள் ஒரு பெரும் தோல்வியைச் சந்தித்தனர்.




குறுகிய காலத்தில், ஹோர்முஸ் நீரிணை மீண்டும் திறக்கப்படுவதும், ஈரான் மீதான அமெரிக்க கடற்படை முற்றுகை நீக்கப்படுவதும் உலக சந்தையில் எரிசக்தி நிலையை எளிதாக்கும். ஆயினும், நீண்ட கால நோக்கில், உலக ஒழுங்கு மாற்றத்தின் இந்தக் காலகட்டத்தில், அனைத்து கடல்வழிப் போக்குவரத்துத் தடைகளும் விரோத நடவடிக்கைகளுக்கு உள்ளாகக்கூடிய அபாயத்தில் உள்ளன என்ற ஒரு அழுத்தமான செய்தியை ஹோர்முஸ் விவகாரம் உணர்த்தியுள்ளது. நீரிணையை மூடும் தங்களின் திறனும், வாஷிங்டனின் பலவீனமான இடமான அதை மீண்டும் திறக்க முயற்சிப்பதில் ஏற்படும் இழப்புகளை ஏற்க அமெரிக்கா விரும்பாததும், அணு ஆயுதத் திறனை விட தெஹ்ரானுக்கு ஒரு சக்திவாய்ந்த தடுப்பாக இருக்கக்கூடும் என்பதை ஈரானியத் தலைவர்கள் உணர்ந்துள்ளனர். இதற்கிடையில், தெஹ்ரான் ஓமானுடன் இணைந்து அந்த நீர் வழிப்பாதையின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த உத்தேசித்துள்ளது.

அணுசக்தித் திட்டத்தைப் பொறுத்தவரை, வாஷிங்டனுடன் எதிர்காலத்தில் ஒரு விரிவான ஒப்பந்தம் எட்டப்பட்டால், தெஹ்ரான் நிச்சயமாக அதைத் தொடரும். ஒருவேளைஉடன்பாடுஎட்டப்படாவிட்டால்,தெஹ்ரான்முன்பு போலவே அந்தத் திட்டத்தைத் தொடர சுதந்திரம் பெறும், ஏனெனில் ஈரானியர்கள் தங்கள் அணுப் பொருட்களை யாரிடமும் ஒப்படைக்க மாட்டார்கள். இருப்பினும், அணு சக்தித் தடுப்பைப் பொறுத்தவரை, சமீபத்திய போரிலிருந்து கிடைத்த பாடங்கள் கலவையாகவே உள்ளன. ஒருபுறம், அமெரிக்காவும் இஸ்ரேலும் அணு ஆயுதம் ஏந்திய ஈரானைத் தாக்கியிருக்க வாய்ப்பில்லை. வட கொரியாவைப் பாருங்கள். மறுபுறம், அணு ஆயுதம் ஏந்திய இஸ்ரேல், ஈரானின் பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு மத்தியிலும், ஈரானுக்கு எதிராக அணு ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. அமெரிக்காவும் பயன்படுத்தவில்லை. இந்த வழிமுறை விவாதிக்கப்பட்டதாகவும், ஆனால் நிராகரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. எனவே, ஈரானைப் பொறுத்தவரை, ஹோர்முஸ் நீரிணையை மூடுவது அதிக பலனளிக்கக்கூடும்.



அமெரிக்கா வசமிருந்த ஈரானிய சொத்துக்களை விடுவிப்பதும், ஈரான் மீதான தடைகளை நீக்குவதும், ‘தெஹ்ரானின் நடத்தையில்’ செல்வாக்கு செலுத்துவதற்கான கருவிகளாக அமெரிக்காவுக்கு அமையக்கூடும். போரில் தோற்றதால், அமெரிக்கா ஈரானை சும்மா விடாது. அமைதிக்காலச் சூழல்கள் படிப்படியாக ஈரானிய சமூகத்தை மென்மையாக்கும் என்றும், போரினால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த உயரடுக்குக்குள்ளான பிளவுகளை வெளிப்படுத்தும் என்றும், மேலும் அமெரிக்கா தனது சூழ்ச்சிகளுக்கு இடமளிக்கும் என்றும் நம்புவதற்கு அதற்கு ஒரு காரணம் இருக்கலாம். ஈரானின் எரிசக்தி மற்றும் தளவாட உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ஒரு நிதியை அமைப்பது, ஈரானியர்களை மீண்டும் மேற்கத்திய நிதி அமைப்புக்குள் கொண்டு வருவதற்கான ஒரு கூடுதல் தூண்டுதலாகத் தெரிகிறது. ஈரானைப் பொறுத்தவரை, போரில் பெற்ற வெற்றியானது, நாட்டின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தி, பொருளாதாரத்தின் செயல்திறனை மேம்படுத்தும் உள்நாட்டுக் கொள்கைகளால் பாதுகாக்கப்பட

தொடர்ச்சி: பக்கம் 15

## தாயகம்: இனப்படு ... தொடர்ச்சி...

இனத்தினை மட்டும் சுத்திகரிப்பதற்காக நடாத்தப்பட்டது மட்டுமல்ல இரண்டு தமிழ்பேசும் இனங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்தினையும் அடிப்படையாககொண்டு நிகழ்த்தப்பட்டது.

கிழக்கில் நடாத்தப்பட்ட படுகொலைகளை நாங்கள் பட்டியல்படுத்துவதற்கான நோக்கம் என்பது வெறுமனே தமிழர்களின் தமிழ் தேசிய உணர்வினையும் தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தினையும் மட்டும் இலக்காக கொண்டது அல்ல மாறாக கிழக்கில் தமிழ்-முஸ்லிம் இனங்கள் ஒன்றாக இணைந்துவாழ்வது சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கு பாரிய சவாலாக மாறும் என்ற நோக்குடனேயே நடாத்தப்பட்டது.

முப்பதாண்டு கால உள்நாட்டு யுத்தத்தின் போது, கிழக்குத் தமிழர்கள் மிகக் கொடூரமான நேரடி வன்முறைகளையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்தனர். ஆயுதமேந்திய தரப்புகள் மற்றும் அரச படைகளின் ஆதரவுடன் பல எல்லைக் கிராமங்களில் இருந்து தமிழர்கள் முற்றாக வெளியேற்றப்பட்டனர்.

வடக்கானது முழுமையான தமிழர் பூமியாக காணப்பட்ட நிலையில் கிழக்கானது மூவினங்களையும் கொண்ட பூமியாக மாற்றப்பட்டது.வடக்கில் அச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டாலும் குடியேற்றங்களை தவிர வேறு செயற்பாடுகளை சிங்கள பௌத்த மேலதிக்கத்தினால் ஏற்படுத்தமுடியவில்லை.

ஆனால் கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை பெருமளவில் ஏற்படுத்தி அங்கு பெரும்பான்மையாக இருந்த தமிழ் -முஸ்லிம் மக்களை மோதவிட்டு அதன்மூலம் தமது செயற்பாடுகளை தடம்பதிக்கு செயற்பாடுகளை சிங்கள பௌத்த மேலாதிக்கம் செயற்பட்டு அதில் முழுமையான வெற்றியையும் கண்டுள்ளது.

இதன்காரணமாகவே கிழக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டதுடன் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். 1990ஆம் ஆண்டு இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் இன்றுவரையில் கிழக்கில் தமிழர்கள் அந்த வலிகளையும் வேதனைகளையும் சுமந்த நிலையிலேயே இருந்துவருகின்றனர்.

தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் மோதல்களை ஏற்படுத்துவதற்காக சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகளினால் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகள் இன்றும் கிழக்கில் செயற்பட்டுவருகின்றன.இந்த சக்திகள் ஒருபோதும் தமிழ் மக்களை தமது பகுதியில் தமது அடையாளங்களுடன் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தாத நிலையே இருக்கின்றது.

இதன் செயற்பாடுகளே கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை தரமுயர்த்துவதிலும் வீரமுனை கிராமத்திற்கான அலங்கார வளைவினை அமைப்பதிலும் தடையினை ஏற்படுத்தி நிற்கின்றது.இலங்கையின் சட்ட வரைவுக்குள் தமிழர்களின் அந்தகோரிக்கை நியாயமானது அது அவர்களுக்கு உரிமையானது என சொல்லப்பட்டாலும் சிங்கள பௌத்த மேலாதிக்கம் அதனை நிறைவேற்றிக்கொடுக்காது. அதனை வைத்து இரண்டு சமூகங்களுக்குள்ளும் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும் நிலைமையே இருக்கின்றது.இந்த நாட்டில் எந்த அரசாங்கம் ஆட்சியமைத்தாலும் அதே நிலைமைதான்.

இன்று கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் தம்மீது நடாத்தப்பட்ட இனசுத்திகரிப்புக்கும் தமது பிரதேசங்களை கபளீகரம் செய்ததற்கும் நீதியை கோரி நிற்கின்றபோதிலும் அவர்களுக்கான நீதியைப்பெற்றுக் கொடுக்கவோ அவர்களுக்கான போராட்டங்களை முன்னெடுக்கவோ யாரும் அற்ற நிலைமையே இன்றும் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் மீது முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இனச் சுத்திகரிப்பு என்பது வெறும் ஆயுத முனையானது மட்டுமல்ல அது சட்டம், நிர்வாகம், தொல்பொருள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி என்ற போர்வைக்குள் மறைந்திருக்கும் ஒரு நீண்டகாலத் திட்டமாகும். கிழக்கில் தமிழர்களின் பூர்வீக அடையாளமும் நிலமும் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், சர்வதேச ரீதியான கவனயீர்ப்பும், உள்நாட்டில் சட்டரீதியான பாதுகாப்பும், தமிழ் மக்கள் மத்தியிலான அரசியல் விழிப்புணர்வும் தற்காலத்திற்கு மிக அவசியமான ஒன்றாகும். அதனை செய்வதற்கு அனைவரும் முன்வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

• • •

## தாய்க்கட்சிக்குள் ... தொடர்ச்சி...

கட்சித் தலைவர் தேர்தலிலேயாகும்.

வாக்கெடுப்பில் 184 வாக்குகளை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் சுமந்திரன் 137 வாக்குகளையும் பெற்றனர். சி. சிறீதரனை எதிர்த்துப் போட்டியிட்ட எம்.ஏ. சுமந்திரன் தோல்வியுற்று சிறிதரன் 47, மேலதிக வாக்குகளால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மூன்றாவது வேட்பாளரான மட்டக்களப்பு சீனித்தம்பி யோகேஸ்வரன் சிறிதரனை ஆதரித்தமையால் அவரின் வாக்கு உட்பட எந்த ஒரு வாக்கையும் யோகேஸ்வரன் பெறவில்லை என்பது ஒரு தேர்தலில் தனது வாக்கை இன்னொருவருக்கு செலுத்திய வேட்பாளர் என்ற சரித்திரம் இந்த தமிழரசுக்கட்சி தலைவர் தெரிவு தேர்தலில் யோகேஸ்வரன் பெற்றுள்ளார்.

தமிழரசுக்கட்சி ஆரம்பித்த 1949,டிசம்பர்,18, தொடக்கம் 2024, ஜனவரி,21, வரை 75, வருட வரலாற்றில் 16, தடவை கட்சி மாநாடுகளும், தலைவர் தெரிவுகளும் இடம்பெற்றன. இவ்வாறு வாக்கெடுப்பு மூலம் எந்த ஒரு தலைவர் பதவியும் தெரிவு செய்யப்படவில்லை. ஒற்றுமையாக பேசி சமாதானமாகவே சகல கட்சி பதவிகளும், 75 வருடங்களாக தெரிவான கட்சியானது 2024, ஜனவரி,21, ல் வாக்கெடுப்பு கலாசாரம் அரசியல் கட்சியில் நடந்தமையால் தற்போது இரண்டு வருடங்கள் ஐந்து மாதங்களாக இரண்டு குழுவாக சிதறி தமிழரசுக்கட்சி பதவிக்காக அடிபிடி படும் கட்சி என்ற பெயரை பெற்றுள்ளது.

2024, ஜனவரி,21, ல் ஏற்பட்ட தலைவர் வாக்கெடுப்பின் எதிரொலி 2024,ஜனவரி,27, ல் திருகோணமலையில் இடம்பெற்ற பொதுச்சபை கூட்டத்தில் ஏனைய பொதுச்செயலாளர் உள்ளிட்ட மத்திய குழு உறுப்பினர்கள் தெரிவில் ஏற்பட்ட முரண்பாடுகள், குழப்ப நிலைமை அதனை சீர் செய்ய முடியாத கட்சிதலைமை விட்ட தவறானது பதவி ஆசைக்காக திருகோணமலை நீதிமன்றில் 2024, பெப்ரவரி திருகோணமலை சாம்பல்தீவைச்சேர்ந்த சந்திரசேகரம் பரா என்பவரால் வழக்கு தாக்கல்செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மாநாட்டை நடத்துவதற்கு நீதி மன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது.

அந்த வழக்கு விசாரணை 2024, பெப்ரவரி, 29, தொடக்கம் 2026, யூன்,20, வரை ஏறக்குறைய இரண்டு வருடங்களாக பல தவணையிடப்பட்டு முடிவின்றி தொடர்வதால் நிரந்தர தலைவரோ, நிரந்தர பொதுச்செயலாளரோ இன்றி தற்காலிக தலைவராக சி. வி.கே. சிவஞானமும், தற்காலிக பொதுச்செயலாளராக எம்.ஏ. சுமந்திரனும் , பாராளுமன்ற குழு தலைவர் பதவியும் தற்காலிகமாக சாணக்கியனும் தற்காலிக பதவிகளுடன் கட்சி தற்போது ஒற்றுமை இன்றி முரண்பாடுகளுடன் தொடர்கிறது.

இந்த முரண்பாடுகளுடன் கட்சி தொடர்வதால் வடகிழக்கு தமிழ் மக்கள் ஒட்டு மொத்த தமிழ்தேசிய கட்சிகள் மீதும் வெறுப்படைந்துள்ளனர்.

போதாக்குறைக்கு தமிழரசுக்கட்சிதான் இரண்டு அணி என பார்த்தால் அதே பாணியில் தற்போது ரெலொ கட்சியும் இரண்டு அணியாக கடந்த 2026, யூன்,14, ல் வவுனியாவில் நடந்த ரெலோ மாநாடு உறுதிப்படுத்தியுள்ளது. செல்வம் அணி, வினோ அணி என ரெலோவும் இரண்டாக பிழவு பட்டுள்ளது.

தாய்க்கட்சி என அழைக்கப்படும் தமிழரசுக்கட்சி தற்காலிக பதவிகளுடன் இரண்டரை வருடமாக இயங்கும் நிலையில் ஒற்றுமை இன்றி முரண்பாடே தொடர்கிறது. இது ஏனைய கட்சிகளுக்கும் வாய்ப்பாக மாறிவிட்டது.

• • •

## ஈக்வடோரியல் கினியாவின் ... தொடர்ச்சி...

“நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் அளவு 10%-ஐ கூட எட்டவில்லை” என்பது கண்டறியப்பட்ட பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக துணை ஜனாதிபதி கூறினார். எந்தெந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பதை அந்த அறிக்கை குறிப்பிடவில்லை.

சஹாராவுக்குத் தெற்கே உள்ள ஆப்பிரிக்காவின் முக்கிய எண்ணெய் உற்பத்தியாளர்களில் ஒன்றான ஈக்வடோரியல் கினியா, தனது ஹைட்ரோகார்பன் வளத்தை பரந்த அளவிலான வாழ்க்கைத்தரமாக மாற்றுவதில் சிரமப்பட்டு வருகிறது. உலக வங்கி தனது 2025 பொருளாதார அறிக்கையில், நாட்டின் பொருளாதாரம் 2024-ல் மதிப்பிடப்பட்ட 0.9% வளர்ச்சியடைந்ததாகவும், ஆனால் அந்த வளர்ச்சி வேலைகளையும் வருமானத்தையும் பாதுகாக்கப் போதுமானதாக இல்லை என்றும், அதே நேரத்தில் ஈக்வடோரியல் கினியா மக்களில் பாதிக்கும் மேற்பட்டோர் இன்னும் வறுமையில் வாழ்வதாகவும் கூறியுள்ளது.

84 வயதான ஒபியாங், 1979-ல் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து நாட்டை ஆண்டு வருகிறார். இதன் மூலம், உலகின் மிக நீண்ட காலம் பதவி வகித்த ஜனாதிபதி என்ற பெருமையைப் பெற்றுள்ளார். அவரது நிர்வாகம், எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குவதாகவும், எண்ணெய் வளத்தை ஆளும் வர்க்கத்தினரிடம் குவிப்பதாகவும் மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகளை வெளிநாட்டுத் தலையீடு எனக் கூறி அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

## பிரேசிலின் தேர்தல்களில் ... தொடர்ச்சி...

“என்னைப் பொறுத்தவரை, அவர் போல்சனாரோவை, தந்தை, மகன், பேரன் என அனைவரையும் தொடர்ந்து விரும்பலாம்,” என்று லூலா கூறினார். “அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அது அவருடைய பிரச்சினை. ஆனால் பிரேசிலின் தேர்தல்களில் தலையிடக் கூடாது.

“இப்போது, பிரேசில் தேர்தல்களில் தலையிடாதீர்கள், ஏனென்றால் பிரேசில் தேர்தல்கள் ஒரு பிரேசில் பிரச்சனை. அமெரிக்கத் தேர்தல்கள் அவர்களுடைய விஷயம், என்று லூலா கூறினார்.

ஆனால் லூலாவின் முக்கிய தேர்தல் போட்டியாளர் போல்சனாரோ குடும்பத்தைச் சேர்ந்தவர்: செனட்டர் ஃபிளாவியோ போல்சனாரோ, ஜெயிரின் மூத்த மகன். ஃபிளாவியோ, பிரேசிலின் தீவிர வலதுசாரி லிபரல் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

இரண்டாவது முறையாக மீண்டும் பதவியேற்றதிலிருந்து, வலதுசாரி வேட்பாளர்களுக்கு ஆதரவாக லத்தீன் அமெரிக்கத் தேர்தல்களைத் திசை திருப்ப முயன்றதாக டிரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

செப்டம்பரில், ஜெய்ர் போல்சனாரோ ஒரு சதித் திட்டம் தீட்டியதாகவும், பிரேசிலின் ஜனநாயகத்தை சீர்குலைக்க முயன்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டு, அவருக்கு 27 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

“அமெரிக்கா உட்பட, தனது பதவிக்காலத்தில் உலகம் முழுவதும் மிகவும் மதிக்கப்பட்ட தலைவரான முன்னாள் அதிபர் போல்சனாரோவை பிரேசில் நடத்திய விதம் ஒரு சர்வதேச அவமானம்,” என்று ட்ரம்ப் எழுதினார். அதனைத் தொடர்ந்து, அவர் சில பிரேசிலியப் பொருட்கள் மீது வரிகளையும், உச்ச நீதிமன்ற நீதிபதி அலெக்சாண்டர் டி மோரேஸ் உட்பட பிரேசிலின் நீதித்துறை உறுப்பினர்கள் மீது தடைகளையும் விதித்தார்.

## அமெரிக்காவுக்கு கடுமை ... தொடர்ச்சி...

வாஷிங்டனையே மண்டியிட வைத்துள்ளது என்று Ynet இணையதளம் எழுதியுள்ளது. “ஈரான் கடுமையான தாக்குதல்களைத் தாங்கி, தனது எஞ்சிய பலத்தை நம்பி, அமெரிக்காவை மண்டியிடச் செய்துள்ளது,” “பிரச்சினை அமெரிக்காவிடம்தான் உள்ளது. அவர்கள் தங்கள் பலவீனத்தைக் காட்டியுள்ளனர்: அவர்களின் சொல் இனி சொல்லாக இருக்காது, அவர்களின் சக்தி இனி சக்தியாக இருக்காது, மேலும் அவர்களின் முற்றுகை இனி ஒரு முற்றுகையாக இருக்காது.” “ஒரு உலக வல்லரசாக அமெரிக்காவின் பொற்காலமாக இவை இருந்திருக்க வேண்டும்,” ஆனால் “ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளின் மாபெரும் பெயர்களான - அமெரிக்காவின் ‘காவிய சீற்றம்’ மற்றும் இஸ்ரேலின் ‘கர்ஜிக்கும் சிங்கம்’ - ஆகியவை துண்டு துண்டாக நொறுக்கப்பட்டுள்ளன,” என்று Ynet இணையதளம் மேலும் கூறுகிறது.

அமெரிக்க-ஈரான் ஒப்பந்தம், இஸ்ரேலுக்கு ஒரு “மூலோபாயத் தோல்வி” என்றும், அமெரிக்கா மற்றும் பிராந்தியத்தில் உள்ள மிதவாத சுன்னி நாடுகளுக்கு ஒரு “தோல்வி” என்றும் இடதுசாரிகளுக்கும் தீவிர வலதுசாரிகளுக்கும் இடையே சமூகத்தில் இத்தகைய ஒருமித்த கருத்தை இஸ்ரேல் நீண்ட காலமாக கண்டதில்லை. “டிரம்ப் ஒரு உடன்பாட்டை எட்டுவதில் உறுதியாக இருக்கிறார். ஒரு வல்லரசின் தலைவர் இதற்கு முன் ஒருபோதும் இத்தகைய தீவிரத்தைக் காட்டியதில்லை, இது பலவீனத்தின் அறிகுறியாகும்,” என்று Ynet நம்புகிறது.

மேலும், “தற்போது தனது அதிகாரப் பிரயோகம் கூட, தன்னை ஒரு உலகளாவிய சூப்பர்மேனாகச் சித்தரிக்கும் டிரம்பின் செயற்கை நுண்ணறிவு உருவாக்கிய காணொளிகளாகச் சுருங்கிவிட்டது” என்றும் அது குறிப்பிடுகிறது. “இதை நம்புவது கடினம், ஆனால் அதுதான் உண்மை: கடுமையான தோல்வியைச் சந்தித்ததாகக் கருதப்பட்ட ஒரு நாட்டிடம், இவ்வளவு சக்திவாய்ந்த ஒரு நாடு இதற்கு முன் ஒருபோதும் இத்தகைய பயங்கரமான பலவீனத்தைக் காட்டியதில்லை,” என்று அந்த இணையதளம் கூறுகிறது. அதனால்தான், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான ஒப்பந்தம், போருக்கான காரணங்களாக முறையாக முன்வைக்கப்பட்ட எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்கவில்லை. அணுசக்திப் பிரச்சினை, ஏவுகணைத் திட்டம் மற்றும் பிற வழக்கமான புகார்கள் இரண்டாம் பட்சமானவை. உண்மையான பிரச்சினை, இஸ்லாமியக் குடியரசு அதன் தற்போதைய வடிவத்தில் நிலைத்திருப்பதுதான்.

மையப் பிரச்சினையில் தோல்வியடைந்ததால், அமெரிக்காவும் இஸ்ரேலும் இப்போது சிறிய விஷயங்கள் முக்கியமானவை என்று பாசாங்கு செய்யலாம், ஆனால் அவை அப்படியல்ல. ஏவுகணைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அணுசக்தித் திட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு சுதந்திர ஈரான் என்பது வாஷிங்டன், மேற்கு ஜெருசலேம் மற்றும் பலருக்கு ஒரு அடிப்படைப் பிரச்சினையாகவே உள்ளது. அவர்களால் அதைத் தீர்க்க முடியவில்லை என்பதை இந்தப் போர் காட்டியுள்ளது.

• • •

## பயங்கரவாத தடைச்சட்டம் ... தொடர்ச்சி...

இந்த நிலையில், எதிர்காலத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் (PTA) நீக்கப்பட்டு, மக்கள் நலன்சார்ந்த புதிய சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார,கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று (19) நடைபெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தலையின் மேல் ... தொடர்ச்சி...

மற்றும் தன்னிச்சையான தலையீடுகள் எந்தளவிற்கு அதிகரித்துள்ளன என்பதைப் பறைசாற்றுகின்றன. உலகின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளை இணைக்கும், நாளொன்றுக்கு 300க்கும் மேற்பட்ட கப்பல்கள் பயணிக்கும் இந்த முக்கியமான கப்பல் பாதையைத் தனது முழுக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க அமெரிக்கா முயல்கிறது.

இந்தச் சூழலில், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான அமைதி உடன்படிக்கை எட்டப்பட்டதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்ததும், உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 20 டொலர்கள் வரை சரிவடைந்தது.

இந்த உலகளாவிய இராஜதந்திர மாற்றத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உடனடியாக வரவேற்று, 'பேச்சுவார்த்தைகளே மனிதகுலத்தின் பலம்' எனப்பதிவிட்ட வேளையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் உடனடியாக எந்தவொரு கருத்தையும் வெளியிடாது மௌனம் காத்தமையானது அதன் கடுமையான மூலோபாயத் தடுமாற்றத்தையே வெளிப்படுத்துகிறது.

இந்த அமைதி உடன்படிக்கையும் உலகளாவிய எண்ணெய் விலை வீழ்ச்சியும் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்குப் பாரிய இராஜதந்திர மற்றும் அரசியல் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், அரசாங்கம் பதவியேற்று மாதங்கள் பல கடந்தும், ரணில் விக்கிரமசிங்கவினால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு தற்காலிகமாக உருவாக்கப்பட்ட பொருளாதார ஸ்திரத் தன்மையைத் தாண்டி, எந்தவொரு புதிய பொருளாதார முன்னேற்றத்தையும் எட்டவில்லை.

மாறாக, அண்மைய நாட்களாக இலங்கையின் பொருளாதாரம் கடுமையான சரிவை நோக்கி நகர்வதையும், பணவீக்கம் அதிகரிப்பதையும் அரசாங்கம் உள்நாட்டில் மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் மெதுமெதுவாக வீழ்ச்சியடைந்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் எச்சரித்திருந்த பின்னணியில், இந்த உள்நாட்டுப் பொருளாதாரப் பின்னடைவு மற்றும் தளர்வு நிலைகளுக்கு தங்களின் தவறான கொள்கைகளை ஒப்புக்கொள்ளாத தற்போதைய அரசாங்கம், 'மத்திய கிழக்கின் போர்ச்சூழல் தான் பொருளாதாரச் சரிவுக்குக் காரணம்' என்ற ஒற்றைக் காரணியை மக்கள் மத்தியில் தங்களின் இராஜதந்திரப் போர்வையாகவும், தற்காப்புக் கேடயமாகவும் பயன்படுத்தி வந்தது.

முன்னதாக, கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் பதவியேற்றவுடன் எடுத்த முதிர்ச்சியற்ற வரிவிலக்குகள் மற்றும் தன்னிச்சையான இரசாயன உரத் தடை போன்ற தவறான தீர்மானங்களால் நாட்டின் பொருளாதாரம் அடிமட்டமாகச் சரிவடைந்த போது, அதே காலகட்டத்தில் பரவிய 'கொவிட் பெருந்தொற்று' சூழலைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, பொருளாதார வீழ்ச்சியின் முழுப் பழியையும் கோவிட் மீது போட்டுவிட்டுத் தப்பிக்க முயன்ற வரலாற்றுத் தவறை தற்போதைய அரசாங்கமும் 'காகம் உட்காரப் பனம்பழம் விழுந்த' கதையாக மத்திய கிழக்குப் போரின் மீது போட்டுத் தப்பிக்க முயன்றது.

ஆனால், தற்போது அமெரிக்கா - ஈரான் அமைதி உடன்படிக்கை எட்டப்பட்டு, சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், உள்நாட்டுப் பொருளாதாரப் பின்னடைவுக்கு இனிமேலும் வெளிப்புறக் காரணிகளைக் காட்டி அரசாங்கம் தப்பிக்க முடியாது. உலகச் சந்தையில் எண்ணெய் விலை உயரும் போது, பேரலுக்கு ஒரு டொலர் உயர்ந்தால் லீற்றருக்கு இரண்டு ரூபா அதிகரிக்க வேண்டும் என்று மிகத்துல்லியமாகக் கணக்குக் காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தற்போது உலகச் சந்தையில் பரலுக்கு 20 டொலர்கள் வரை விலை வீழ்ச்சியடைந்துள்ள போது, அந்தப் பலனை உள்நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு எத்தகைய கணக்கைக் காட்டப் போகிறார் என்ற நியாயமான கேள்வி எழுந்துள்ளது.

மத்திய கிழக்குப் போரினால் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவுகள் உடனடியாகச் சீராகாது என்பது உண்மை என்றாலும், போர் முடிவுக்கு வந்துவிட்ட சூழலில், சந்தை வழமைக்குத் திரும்பிய பின்னரும் இலங்கையின் பொருளாதாரம் மேல்நோக்கி வளர்ச்சி பெறத் தவறினால், அரசாங்கம் இவ்வளவு காலமும் கூறிவந்த காரணங்கள் யாவும் வெறும் அரசியல் சாக்குப்போக்குகள் என்பதும், அவர்களிடம் தெளிவான பொருளாதாரக் கொள்கை இல்லை என்பதும் மக்கள் மத்தியில் அம்பலமாகிவிடும்.

இத்தகையதொரு இக்கட்டான அரசியல் சூழல் உருவாகுவது அரசாங்கத்தின் நாடித்துடிப்பிற்கே பேராபத்தாக முடியும் என்பதால் தான், இந்த உலகளாவிய அமைதி உடன்படிக்கையை அரசாங்கத் தரப்பு உடனடியாக வரவேற்காது மௌனம் காத்தது.

அமெரிக்காவுடனான இந்த இராஜதந்திர விரிசலும், ஹோர்முஸ் ஜலசந்தி விவகாரத்தில் இலங்கை எடுத்த பிடிவாதமான போக்கும், வல்லரசு நாடுகளின் மூலோபாய நலன்கள் மோதிக்கொள்ளும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இலங்கை எவ்வளவு பலவீனமான இராஜதந்திரக் கயிற்றில் நடக்கிறது என்பதைத் துல்லியமாக உணர்த்துகின்றது.

உலகளாவிய ரீதியில் அமெரிக்காவின் ஆதிக்கம் சவாலுக்குட்படுத்தப்படும் இக்காலகட்டத்திலும், இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தையாகவும், சர்வதேச நிதி நிறுவனங்களின் பின்னணியாகவும் அமெரிக்காவே விளங்குவதை தற்போதைய அரசாங்கம் மறந்துவிட்டுச் செயற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இராஜதந்திரக் கோபத்தால் விதிக்கப்படவுள்ள சுங்கவரி நெருக்கடிகளை எதிர்கொள்வதா, அல்லது மத்திய கிழக்கு அமைதியினால் ஏற்படும் உலகளாவிய பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப உள்நாட்டுக் கொள்கைகளைச் சீரமைப்பதா என்ற இருமுனைத் தாக்குதலுக்குள் தற்போதைய இலங்கை அரசாங்கம் சிக்குண்டு, தெளிவான திசையின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

• • •

## போரில் அமெரிக்காவின் ... தொடர்ச்சி...

வேண்டும்.

இருப்பினும், லெபனானில் நிலவும் சூழல், இந்த ஒப்பந்தத்தையே முறிக்கும் ஒரு காரணியாக இருக்கலாம். இந்த ஒப்பந்தத்தில் லெபனான் முனையைச் சேர்ப்பதற்கு அதிபர் டொனால்ட் டிரம்பின் ஒப்புதலைப் பெறுவதில் தெஹ்ரான் வெற்றி பெற்றுள்ளது. ஹிஸ்புல்லாவை ஒழிப்பதற்கான தனது முயற்சிகளை இஸ்ரேல் தொடர வேண்டும் என்பதில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதியாக இருக்கிறார். நெதன்யாகு மீது ட்ரம்ப் சமீபத்தில் காட்டிய கோபம், மிக முக்கியமான ஒன்றைப் பிரதிபலிக்கிறது: அமெரிக்க சமூகத்தின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியும் அரசியல் வர்க்கமும் இஸ்ரேல் மீது பொறுமையை இழந்து, அதன் மீதான தங்கள் பார்வையைத் தளர்த்தி வருகின்றன. இஸ்ரேலின் அதிகரித்து வரும் சர்வதேசத் தனிமைப்படுத்தலின் பின்னணியில் இது நிகழ்கிறது.

உண்மையில், இந்தப் போரினால் முக்கியமாகப் பாதிக்கப்பட்ட நாடு இஸ்ரேல்தான். காசா, லெபனான், யேமன் முதல் மேற்குக் கரை, சிரியா, ஈராக், எல்லாவற்றிற்கும் மேலாக ஈரான் வரையிலான ஏழு முனைகளிலும் உள்ள அச்சுறுத்தல்களை வலுக்கட்டாயமாக ஒழிக்கும் அதன் புதிய உத்தி, ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்குப் பதிலாக 'முடிவற்ற போர்களையே' தந்துள்ளது. அதன் வெளிப்படுத்தப்படாத அணுசக்தித் தடுப்பு, இஸ்ரேலிய இலக்குகள் மீது ஈரான் ஏவுகணைகளையும் ஆளில்லா விமானங்களையும் வீசுவதைத் தடுக்கத் தவறிவிட்டது. எதிர்காலத்தில், நெதன்யாகு மீதான அதிருப்தி அவரது தீவிரவாதக் கொள்கைகளுக்கான பரந்த ஆதரவிற்கு எதிராக மோதும் ஒரு தேர்தலை இஸ்ரேல் எதிர்கொள்ளும்.

பாரசீக வளைகுடாவின் அரபு நாடுகளும் நல்ல நிலையில் இல்லை. பாதுகாப்பு உத்தரவாதமாக அமெரிக்க இராணுவத் தளங்களை அவர்கள் நம்பியிருந்தது ஒரு பேரழிவு தரும் பேரமாக மாறியுள்ளது. நாடுகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, இந்தத் தளங்கள் காந்தங்களைப் போலச் செயல்பட்டு, ஈரானின் பதிலடித் தாக்குதல்களை ஈர்த்தன. வணிகம் செய்வதற்குப் பாதுகாப்பான மற்றும் வசதியான இடங்கள் என்ற வளைகுடா நாடுகளின் பிம்பம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இந்த நாடுகள் மீண்டு வர வேண்டுமானால், தங்களின் தோல்வியுற்ற பாதுகாவலருடன் தங்களை இணைத்துக் கொள்வதை விட, ஒரு சிறந்த பாதுகாப்புக் கொள்கையை வகுக்க வேண்டியிருக்கும்.

எவ்வாறாயினும், ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேல் போர், உலகளாவிய அதிகார மாற்றத்தில் ஒரு மைல்கல் நிகழ்வாகும். வீழ்ச்சியடைந்து வரும் உலகளாவிய மேலாதிக்க சக்தியும், அதன் கூட்டாளியான, பிராந்தியத்தின் முதன்மையான இராணுவ சக்தியும், காலத்தின் போக்கை மாற்ற கடுமையாக முயன்று தோல்வியடைந்துள்ளன. அவர்கள் ஒரு முக்கியமான போரில் தோற்றனர், ஆனால் இது உலக நெருக்கடியின் முடிவல்ல.

நன்றி: ரஸ்ய ருடே

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS



## இஸ்ரேலின் பங்கு... தொடர்ச்சி...

என்ன சாதித்தது என்பதையும் அனைவரும் பார்ப்பார்கள்,”. “பேச்சுவார்த்தையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் இஸ்ரேல் ஈடுபடுத்தப்படாமலேயே முடிவு தீர்மானிக்கப்பட்டது. மேலும், வரவிருக்கும் 60 நாள் பேச்சுவார்த்தையில், இஸ்ரேல் எந்த அளவிற்கு ஈடுபடும் என்பது எங்களுக்குத் தெரியாது. அடிப்படையில், அது ட்ரம்ப் நிர்வாகத்தால் அதற்கு ஆணையிடப்படும்.”

இஸ்ரேலில், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இரு தரப்பிலும், இந்தப் போர் ஒரு “தோல்வி” என்ற மனநிலையே நிலவியது. இஸ்ரேல் “ஓரங்கட்டப்பட்டது” மட்டுமல்லாமல், நெதன்யாகு அறிவித்த போர் நோக்கங்களான ஈரானில் ஆட்சி மாற்றம், அதன் அணுசக்தித் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருதல், ஆயுதக் குழுக்களுக்கான ஆதரவைத் துண்டித்தல் மற்றும் அதன் பாலிஸ்டிக் ஏவுகணைத் திறனைக் குறைத்தல் ஆகியவற்றில் எதுவும் அடையப்படவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்... தொடர்ச்சி...

சரணடைந்ததற்கான ஆதாரம் என்று விவரித்தார்.

அமெரிக்கக் கடற்படை முற்றுகையை நீக்குதல், ஈரானிய எண்ணெய் ஏற்றுமதிக்கான தடைகளிலிருந்து விலக்கு அளித்தல், முடக்கப்பட்ட ஈரானிய நிதிகளை அணுகுதல், மற்றும் குறைந்தது. 300 பில்லியன் டொலர் மதிப்பிலான அமெரிக்க ஆதரவுடனான பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம் உள்ளிட்ட வொஷிங்டனின் தொடர்ச் சியான சலுகைகளை இந்த ஆவணம் பிரதிபலிக்கிறது. இரு தரப்பினரும் இறுதி ஒப்பந்தம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் வரை, புதிய தடைகளை விதிக்கவோ அல்லது அப்பகுதியில் கூடுதல் படைகளை நிலைநிறுத்தவோ மாட்டோம் என்றும் வொஷிங்டன் ஒப்புக்கொண்டுள்ளது.

## போரின் விளைவுகளைச்... தொடர்ச்சி...

அறிவிக்கப்பட்டாலும், இராணுவ மயமாக்கல் முடிவடையவில்லை. நிலங்கள் இன்னும் ஆக்கிரமிக் கப்பட்டுள்ளன. நினைவுகூரல்கள் கண்காணிக்கப் படுகின்றன. பொது மக்களின் வாழ்வின் மீது பாதுகாப்பு அரசின் பார்வை இன்னும் நிலவுகிறது. பெண்கள் வாழும் சமூகத்தில் இந்த இராணுவ இருப்பு ஒரு நிரந்தரமான அச்ச உணர்வை அவர்களின் இயல்பு வாழ்வை அச்சுறுத்தி நிற்கிறது.

உண்மையில் போர் என்பது வெறும் ஆயுதங்களுடன் மாத்திரம் நிகழ்வதல்ல. அது நினைவுகளின் வழியாகவும் முன்னெடுக்கப்படுகிறது. யார் நினைவு கூரலாம்? யாருடைய இறப்புகள் பேசப்படலாம்? யாருடைய துயரங்கள் மறைக்கப்பட வேண்டும்? என்ற கேள்விகளின் அரசியலும் ஆகும். வடக்கு-கிழக்கின் தமிழ்ப் பெண்கள் இந்த நினைவியல் போராட்டத்தின் மையத்தில் நிற்கின்றனர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட மகன்களின் பெயர்களை மறக்க மறுக்கின்றனர். அவர்கள் அழிக்கப்பட்ட கிராமங்களின் கதைகளை மீண்டும் மீண்டும் சொல்கின்றனர். அவர்கள் மௌனமாக இருக்க மறுக்கின்றனர்.

இதுவே ஸ்ரீலங்கா அரசுக்குப் பாரிய சிக்கலாக மாறியுள்ளது. இன்றைய ஈழப் போராட்டக் களத்தில் முன்னணியாக முன்னிற்பவர்கள் பெண்கள்தான். அப்படிப் பார்க்கையில் வடக்கு-கிழக்கின் பெண்களின் பிரச்சினைகளை வெறும் ‘பெண்கள் பிரச்சினை’ என்று கூற முடியாது. சிறுபான்மைச் சமூகத்தில் பெரும்பான்மையான விதவைகள், காணாமல் ஆக்கப்பட்டும் கணவன் வருவார் எனப் பூவோடும் பொட்டோடும் காத்திருக்கும் பெண்கள், இராணுவ மயத்தின் அச்சுறுத்தலான வாழ்வு, பொருளாதார நெருக்கடிகளும் அபாய வலைகளுமென்று ஈழ மண்ணில் தமிழ் பெண்கள் எதிர்கொள்ளுகிற போராட்டம் என்றுதான் முடிவுக்கு வரப் போகிறது? ஸ்ரீலங்கா அரசு மாத்திரமல்ல, தமிழ் தலைமைகளும் இந்த நிலைமைக்குப் பதில் சொல்ல வேண்டும்.

• • •

## ஒரே உழைப்பு ... தொடர்ச்சி...

இந்த சுரண்டலுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஒரே பணியைச் செய்யும் இரு தொழிலாளர்கள் இன அடிப்படையில் வேறுபட்ட முறையில் நடத்தப்படுகிறார்கள் என்ற உணர்வு உருவானால், அது சமூக ஒற்றுமைக்கும் தொழிலாளர் நீதிக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். மலையகத் தமிழ் தொழிலாளர்களின் பலவீனமான நிலை வெறும் இன அடையாளத்தால் மட்டும் உருவாகவில்லை.அது பொருளாதார மற்றும் சமூக காரணிகளின் சேர்க்கையாகும். பல தொழிலாளர்கள் தோட்ட குடியிருப்புகளிலேயே வாழ்கின்றனர். அவர்களின் வேலை, வீடு, சில சமயங்களில் குடிநீர் மற்றும் பிற அடிப்படை வசதிகளும் கூட ஒரே அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

இந்த நிலைமையில் வேலையைவிட்டு வெளியேறுவது என்பது வருமானத்தை மட்டும் இழப்பதல் லாது வாழும் இடத்தையும் இழப்பதாக மாறுகிறது. இதனால் தொழிலாளர்கள் அநியாயமான நிபந்தனைகளையும் ஏற்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. அதேநேரம், இலங்கையில் குறைந்தபட்ச ஊதியம் தொடர்பான சட்டங்கள் இருந்தாலும், அவை நடைமுறையில் அனைவருக்கும் சமமாகப் பயன்படுகிறதா என்பது முக்கியமான கேள்வியாக உள்ளது. அரசாங்கம் அறிவிக்கும் ஊதிய உயர்வுகள் பெரும்பாலும் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன அமைப்புகளின் கீழ் உள்ள தொழிலாளர்களுக்கு மட்டுமே பயனளிக்கின்றன.

தனியார் மற்றும் சிறு தோட்டங்களில் பணிபுரிபவர்கள் பல நேரங்களில் இந்தப் பாதுகாப்புகளுக்கு வெளியே விடப்படுகின்றனர். இதனால் ஒரே தொழில்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கிடையே பெரும் வருமான இடைவெளி உருவாகிறது. இதேவேளை, மலையகத் தமிழ் சமூகத்தின் வரலாறு சமூகப் புறக்கணிப்பின் வரலாறாகவும் பார்க்கப்படுகிறது. கல்வி வாய்ப்புகள் குறைவு, நில உரிமை பிரச்சினைகள், சுகாதார சேவைகளுக்கான அணுகல் குறைபாடுகள் மற்றும் அரசியல் அதிகாரமின்மை ஆகியவை பல தலைமுறைகளாக இந்த சமூகத்தை பாதித்துள்ளன. தெற்கிலுள்ள தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களும் இதே பிரச்சினைகளின் நீட்சியை அனுபவிக்கின்றனர்.

### தொழிற்சங்கங்களின் பங்கு


இலங்கையின் தொழிலாளர் இயக்க வரலாற்றில் தொழிற்சங்கங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன. ஆனால் தனியார் மற்றும் சிறு தோட்டங்களில் தொழிற்சங்கங்களின் செல்வாக்கு பல நேரங்களில் குறைவாக இருக்கின்றன. தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பற்றி அறியாத நிலையும், உரிமைகள் குறித்து குரல் கொடுக்க அஞ்சும் சூழலும் காணப்படலாம்.

இதனை மாற்ற தொழிற்சங்கங்கள் மற்றும் குடிமக்கள் அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. குறிப்பாக தென் மாகாணத்தில் உள்ள தேயிலைத் தோட்ட தமிழ் தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கங்கள் உரிய முறையில் இயங்குவதில்லை அல்லது அவற்றுக்கான அனுமதி மறுக்கப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது. தெற்கிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் நிலைமை குறித்து எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் இலங்கையின் தொழிலாளர் மற்றும் மனித உரிமை வரலாற்றில் முக்கிய கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியவையாகும்.

ஒரே வேலைக்கு சமமான சம்பளம், இன அடிப்படையிலான பாகுபாடுகளற்ற வேலை சூழல், சட்டப் பாதுகாப்பு மற்றும் மனித கண்ணியம் ஆகியவை எந்த சமூகத்திற்கும் அடிப்படை உரிமைகளாகும். மலையகத் தமிழர்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக நூற்றாண்டுக்கும் மேலாக அளித்த பங்களிப்பை கருத்திற் கொண்டால், அவர்களுக்கு சமமான உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை உறுதி செய்வது ஒரு நலத்திட்டக் கடமை மாத்திரமின்றி அது ஒரு வரலாற்று நீதி நடவடிக்கையாகவும் உள்ளது. இந்தப் பிரச்சினையை தனிப்பட்ட தோட்டங்களின் சிக்கலாக மட்டுமே பார்க்க முடியாது. இது இலங்கையின் சமூக நீதி, தொழிலாளர் உரிமைகள் மற்றும் இன சமத்துவம் குறித்த பரந்த விவாதத்தின் ஒரு பகுதியாகும். அதனால், அரசாங்கம், தொழிலாளர் அமைப்புகள், மனித உரிமை நிறுவனங்கள், தோட்ட நிர்வாகங்கள் மற்றும் குடிமக்கள் சமூகம் ஆகிய அனைத்தும் இணைந்து செயற்பட்டால்தான் இந்த நிலைமையை மாற்ற முடியும்.

• • •




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

# சிறுவர் ஆக்கங்கள்







**கவிதை**

## அன்பின் பெருமை

பொய்யுலகின் இருளகற்றும் புனித விளக்கே!
புவியினில் வாழும் உயிர்களின் அமுதே!
வையகத்து மாந்தரை இணைக்கும் பாலமே!
வார்த்தையில் அடங்கா வற்றாத நதியே!
கையினில் ஏந்தும் குழந்தையின் சிரிப்பே!
கண்ணீரைத் துடைக்கும் கனிவான கரமே!
மெய்யான வாழ்வின் மேதகு பொருளே!
மேதினியை காக்கும் மாபெரும் அரணே!

சுயநலப் பேய்களை விரட்டும் சுடரே!
சுற்றமும் நட்பும் தழைக்கும் நீரே!
நயமுடன் பேசும் நல்வார்த்தை! ஒளியே!
நாடிடும் நெஞ்சின் நாத வெள்ளமே!
பயமதை தீர்க்கும் பாசத்தின் உறவே!
பகைமையும் வெல்லும் பாங்குடைத் திறமே!
உயிரினில் கலந்து உணர்வூட்டும் தேனே!
உலகினை ஆளும் உன்னதக் கோனே!

இறைவனின் வடிவம் இந்த அன்பன்றோ!
இதயங்கள் இணையும் இன்பப் பேறன்றோ!
மறையவர் போற்றும் மாண்புறு பண்போ!
மண்ணில் சுவர்க்கத்தை காட்டும் விண்மீனோ!
குறைகளை மறைக்கும் குணத்தின் குன்றோ!
கோடிப் புண்ணியம் தரும் நல்வழியோ!
பிறவிப் பெருங்கடல் கடத்தும் தோணியோ!
பேரண்டம் இயக்கும் பிரம்மன் தாளோ!

– மு. சந்தியா, செல்வநாயகபுரம்

**கட்டுரை**

## இலங்கையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தில் வெளிநாட்டு பயண ஆலோசனை நிறுவனங்களுக்கு இலாபமா நட்டமா?

தற்போதைய காலத்தில் இலங்கையிலிருந்து வேலைக்கு செல்வோர் மட்டுமே அதிகமாக உள்ளனர். வெளிநாடுகளுக்கு சுற்றுலாவிற்கு செல்லும் பயணிகள் மிகக் குறைவாகவே உள்ளனர். காரணம் தற்போதைய விலையேற்றங்களால் மக்களுக்கு அன்றாட வாழ்க்கை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மட்டுமே வருமானம் பயன்படுகிறது. ஆகவே நிறுவனங்களுக்கு அதிக இலாபமும் இல்லை, அதிக நஷ்டமும் இல்லை. இரண்டுமே சமமான ரீதியில் தான் காணப்படுகிறது.

– ச. திகழினி, கன்னியா



# தாயகமும் வாழ்வும்






சர்வதேச மேற்பார்வை வேண்டும்!
ARED
Association for Relatives of the Enforced